விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 12 திங்கட்கிழமை (27.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 008

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

கடந்தகால நிகழ்வுகளை மறந்து புதிய நாட்டை உருவாக்குவோம்

பிரதமர் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்தகாலநிகழ்வுகளையும்குரோதஉணர்வுகளையும் மறந்து புத்திசாதுர்யமான புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென பிரதமர் டி.எம்.ஜெயரட்ண தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில்நேற்றுநடைபெற்றதேசிய பாதுகாப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனைக் கூறினார்.அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இந்நாட்டில் நான்கு மதங்களைச் சேர்ந்த 5 பிரிவினர் இருக்கின்றனர்.இவர்கள் அனைவரும் 65 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவில் வாழ்கின்ற இலங்கையர்கள்.இவ்வளவு சிறிய நாட்டில் அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடன் வாழ (16ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைவெற்ற தேசிய பாதுகாப்புத் தின நிகழ்வில் பிரதமர் டி.எம். ஜெயரட்ண ,அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட்டோர் அணிநடை நிகழ்வை ஏற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்

(படம் : சுதாகர்)

ஐ.நா. நிபுணர் குழுவின் தலைவர் விரைவில் கொழும்பு வருகை?

(கொழும்பு)

போரின் இறுதிக் காலத்தில் இடம்பெற்றதாக குற்றம் சாட்டப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் அமைக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் தலைவர் சிற்சார்ட் பெனட் அடுத்த வாரம் கொழும்பு வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவருடன் (16ஆம் பக்கம் பார்க்க)

பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் தேசிய பாதுகாப்புத் தினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் தேசிய பாதுகாப்புத் தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வருகைதராத நிலையில் பிரதமர் டி.எம்.ஜெயரட்ண தலைமையிலேயே நிகழ்வுகள் இடம்பெற்றன.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த விஜயசேகர, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட (16ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

சிவஸ்ரீ சிங்காரம் எழுதும்

2011 ஆம் ஆண்டிற்கான

சிறப்பு பலன்கள்

யுத்த நிறுத்தத்துக்கான காரணத்தை விளக்குமாறு ரணிலுக்கு அழைப்பு!

நல்லிணக்க ஆணைக்குழுவிடமிருந்து

(கொழும்பு)

2002ஆம் ஆண்டுவிடுதலைப்புலிகள் அமைப்புடன் போர்நிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டமைக்கான காரணங்களை விளக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கத்திற்கானஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.வி.அத்துகொட இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவுடன் (16ஆம் பக்கம் பார்க்க)

சுனாமி பேரலை அழிவின் ஆறாம் ஆண்டு நினைவு நிகழ்வு வடமராட்சியில் நேற்று நடைவெற்றது. இதில் உறவுகளின் இழப்பால் கதறி அழும் குடும்பத்தினரை படத்தில் காணலாம்.

(படம் : கரவெட்டி செய்தியாளர்)

'அழைப்பு கிடைக்கவில்லை நிகழ்வில் பங்கேற்கவில்லை'

கூட்டமைப்பு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தேசிய பாதுகாப்புத் தின வைபவத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்ததாவது, தேசிய பாதுகாப்புத் தினத் (15ஆம் பக்கம் பார்க்க)

NIBM BUILDING COMPETENCIES
Jaffna
யாழ்ப்பாணம்
A Statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development

ஒளிமயமான எதிர்காலத்திற்கு NIBM வழிகாட்டும்

நாட்டின் நம்பிக்கை வாயந்த உயர் கல்வி நிலையம் வழங்கும் முகாமைத்துவ, தகவல் தொழில்நுட்ப மற்றும் ஆங்கில கற்கை நெறிகள் மூலம் வெற்றிகரமான எதிர்காலத்தில் அடியெடுத்து வையுங்கள்

• மனிதவள முகாமைத்துவத்தில் அடிப்படைக் கற்கை நெறி (ஆங்கிலத்திலும் தமிழிலும்)
• கணனித் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் கற்கை நெறி
• வியாபார முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை நெறி
• ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கை நெறி

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

அனுமதிகள் ஆரம்பமாகியுள்ளன!
முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

"எதற்காகவும் நான் அஞ்சப்போவதில்லை தமிழுக்காக உயிரை இழக்கவும் தயார்"

சீமான் பரபரப்பு உரை

(சென்னை)

என்னை கைது செய்தீர்கள். 5 மாதம் சிறையில் அடைத்தீர்கள். இதற்கெல்லாம் நான் அஞ்ச மாட்டேன். தமிழுக்காக உயிரையும் இழக்க தயார் என நாம் தமிழர் கட்சி சார்பில் சென்னையில் நடை பெற்ற பெரியார்- எம்.ஜி.ஆர். நினைவு நாள் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் சீமான் தெரிவித்தார்.

சென்னை எம்.ஜி.ஆர் நகரில் நேற்று முன்தினம் இரவு நடை பெற்ற இக் கூட்டத்தில் திரைப்பட இயக்குநரும் நாம் தமிழர் கட்சியின் தலைவருமான சீமான் பேசியதா வது,

மூட நம்பிக்கைகளில் இருந்து மக்களை வெளிக்கொண்டுவரப் போராடியவர் பெரியார். அவரது கருத் துக்களை சினிமா பாடல்கள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தவர் எம்.ஜி.ஆர்.

வேப்பமர உச்சியில் நின்று பே யொன்று ஆடுதுன்னு விளையாடப் போகும் போது சொல்லிவைப் பாங்க. உந்தன் வீரத்தை முளையி லேயே கிள்ளி வைப்பாங்க, திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக் கொண்டே இருக்குது அதை சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது. என்பதுபோன்ற பாடல்கள் மூலம் நல்ல கருத்துக் களைஎடுத்துச்சொன்னார்எம்.ஜி.ஆர்.

ஈழத்தமிழர்களுக்கு எம்.ஜி.ஆர். போல உதவிசெய்த தலைவர்கள் யாரும் கிடையாது. கடந்த 60 ஆண் டுகளாக இலங்கையில் தமிழர்கள் செத்து மடிகிறார்கள். தமிழக மீனவர் களை இலங்கை இராணுவம்கொன்று குவிக்கிறது.

இனிமேலும் தமிழன் தாக்கப் பட்டால் இங்குள்ள சிங்கள மாணவர் களை அடிப்போம் என்று பேசியதற் காக தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் என்னை கைது செய்தீர்கள். 5 மாதம் சிறையில் அடைத்தீர்கள் இதற்கு எல்லாம் நான் அஞ்சமாட்டேன்.

ஒரு இலட்சம் துப்பாக்கிகளுக்கு மத்தியில் இலங்கைக்குச் சென்று பிரபாகரனை சந்தித்து வந்தவன் நான். சிறையில் இருந்து எனது தம்பிமார்கள் முருகன், பேரறிவா ளன், சாந்தன், தங்கை நளினி ஆகி யோர் என்னை சந்தித்துவிடக் கூடாது என்பதில் சிறைத்துறை அதிகாரி கள் கவனத்துடன் இருந்தனர்.

ஓடும் தண்ணீரை 5 மாதம் தேக்கிவைத்துவிட்டு பின்னர் திறந்து விட்டால் அது காட்டாற்று வெள்ளமாக ஓடும். அதைப்போலநானும் வேகத்து டன் செயற்படுவேன். தற்போது எனது தோளில் இரண்டு சுமைகள் உள்ளன. ஒன்று ஈழ விடுதலை. இன்னொன்று சிறையில் இருக்கும் எனது தம்பிமார்களின் விடுதலை. இந்த இரண்டும் நடக்கும் வரை நான் ஓயமாட்டேன்.

தனி ஈழத்தை வென்றே தீருவோம்

இலங்கைக்குச் சென்ற இந்திய அமைதிப்படையில் தொடங்கி ஈழத் தவர்களை கொன்று குவித்தது வரை காங்கிரசுக்கு பெரும் பங்கு உண்டு. ஈழத் தமிழர்கள் மீது காங் கிரசுக்கு அக்கறை இல்லை. எனவே காங்கிரசை வீழ்த்துவதே எங்கள் இலட்சியம். அதுவரை சீமான் ஓய மாட்டான்.

இன்று காங்கிரஸ் அரசில் ஊழல் மலிந்துவிட்டது. ஸ்பெக்ட் ரம் முறைகேடு, காமன்வெல்த் ஊழல் இதற்குமுன்பு போபர்ஸ் ஊழல் என காங்கிரஸ் கட்சியின் ஊழலை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இவைகளில் இருந்து தப்பிப்பதற்காக விடுதலைப் புலி கள் மீது தற்போது வீண்பழி சுமத் தத் தொடங்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத் தை அழித்துவிட்டோம் என்பது உண்மையா? விடுதலைப்புலிகளால் தலைவர்களின் உயிருக்கு ஆபத்து என்பது உண்மையா? விடுதலைப் புலிகள் ஒருபோதும் கோழைகளைக் கொல்லமாட்டார்கள். விடுதலைப் புலிகளைப் பற்றி நான் பேசினால், சீமான் கோடிகோடியாக பணம் வாங்கிவிட்டார் என்று கூறுகிறார் கள்.

விடுதலைப் புலிகளிடமிருந்து நான் 2 ஆயிரம் கோடி ரூபாய் வாங்கியிருப்பதாகவும் அந்தப் பணத்தை பதுக்கி வைத்திருப்பதா கவும் பொய்யான தகவலை பரப்பி வருகிறார்கள். இவ்வளவு பணம் என்னிடம் இருந்தால் அதனை இலங்கை அரசிடம் கொடுத்து எங் கள் பகுதியை எழுதி வாங்கியிருக்க மாட்டோமா?

நாங்கள் தமிழ் நாட்டின் ஆட்சி மாற்றத்திற்காக போராடவில்லை. அரசியல் மாற்றத்திற்காக போராடு கிறோம். நாங்கள் அரசியல்வாதி கள் அல்ல; பேராளிகள், சீர்திருத்த வாதிகள் அல்ல; இலட்சியவாதிகள். எனது பேச்சை கேட்பதற்காக என் முன்னால் கூடியிருக்கும் நீங்கள் எல்லாம் எனது பின்னால் அணி வகுத்து வாருங்கள்.

பிரபாகரனின் தம்பி என்ற உரிமையில் உங்களிடம் இதனைக் கேட்கிறேன். இந்தியாவுக்கு என்று இறையாண்மை, பண்பாடு எதுவும் இல்லை தமிழ், மலையாளம், தெலுங்கு என பல மொழிகளின் பண்பாடே இந்தியப் பண்பாடு.

தமிழுக்காக உயிரை இழக்க வும் தயாராக உள்ளேன் இவ்வாறு சீமான் பேசினார். (ச-5)

துணைக்காய் கிணற்றிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

முல்லைத்தீவு மாவட்ட துணுக் காய் தேராங்கட்டையில் நேற்று முன் தினம் மாலை கிணறு ஒன்றினுள் இருந்து சடலம் ஒன்று பொலிசாரி னால் மீட்கப்பட்டுள்ளது. இச்சடலம் கடந்த 7ம் திகதி காணாமல் போன அங்கமுத்து பாலகிருஷ்ணன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவரு வதாவது, டிசம்பர் மாதம் 7ம் திகதி 47 வயதுடைய அங்கமுத்து பால கிருஷ்ணன் தேராங்கட்டையிலுள்ள அவரது ஊரில் வைத்து காணாமல் போயுள்ளார். நேற்று முன்தினம் மாலை மாடு மேய்த்துக்கொண்டு காட்டு வழியால் சென்ற ஒருவர் பாழடைந்த கிணற்றுக்குள் சடலம் ஒன்று மிதப்பதைக்கண்டு பொலி ஸாரிடம் முறையிட்டுள்ளார்.

பொலிஸாரின் உதவியுடன் வெ ளியில் எடுக்கப்பட்ட சடலம் அங்க முத்து பாலகிருஷ்ணன் என உற வினர்களால் அடையாளம் காணப் பட்டுள்ளது. பிரேத பரிசோதனை களுக்காக சடலம் நேற்றுமுன் தினம் இரவு வவுனியா பொது வைத் தியசாலைக்கு கொண்டுவரப்பட் டுள்ளது. தற்போது சடலம் வவுனி யா பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. (ச-5)

நாடு முழுவதும் தீவிர சோதனை

புதிய இன்புளுவென்ஸா எச் 1 என் 1 தொற்றுப் பரவலைத் தடுக் கும் முகமாக நாடெங்கிலும் உள்ள புடைவை விற்பனை நிலையங்கள், வியாபார நிலையங்கள், சன நெரி சல் உள்ள இடங்கள் அனைத் தையும் சோதனையிட உள்ளதா கச் சுகாதார அமைச்சர் தெரிவித் துள்ளார்.

நாட்டில் கடந்த சில தினங்க ளாக இன்புளுவென்ஸா தொற்று நோய் அதிகரித்துக் காணப்படு கின்றது. இத்தொற்றிலிருந்து மக் களைப் பாதுகாக்கும் முன்னெச்ச ரிக்கையாகவே விசேட கருத்தரங் குகள், சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நிறுவனங்கள், வர்த்தக நிலை யங்களில் தொடர்ச்சியான தொலை பேசி உரையாடல்கள், வாகனம் செலுத்துவோர் கைபிடிகள் மூலம் குறித்த வைரஸ் தொற்றுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றது.

எனவே இத்தொற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித் துள்ளார். (ச-7)

அழைப்...

தையொட்டி யாழ். வீரசிங்க மண்டபத்தில்நடைபெறுகின்றதேசிய பாதுகாப்புத்தின வைபவத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பு எனக்குக் கிடைக்கவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பி னர்கள் இதில் ஏன் கலந்துகொள்ள வில்லையென்பதுதொடர்பில்எனக்கு எதுவும் தெரியாது என்றார். (ச-5)

(சி-1975)

வீடு விற்பனைக்கு

மானிப்பாயில் 4.2 பரப்புக் காணியில் சகல வசதிகளுடனும் 5 அறை கள் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. (16 தென்னை, 7 பலா, 4 மாமரங்களைக் கொண்டதும், மாதாந்தம் 2500/= – 3000/= வரு மானம் பெறக் கூடியதும், கிணறு, TANK, MOTOR வசதிகளு டைய காணி) 5 நிமிடம் நடந்துசெல்லும் தூரத்தில் கோயில்கள், வைத்தியசாலை, பிரதான வீதி, பஸ்தரிப்பிடம், வங்கிகள், சுப்பர் மார்க்கட் ஆகிய சிறந்த சுற்றுச் சூழலில் அமைந்துள்ளது.
தொடர்புகொள்ளவும். TEL - 0112360135
MOB - 0755002618 E-mail - transworlde@sltnet.lk
(சி-1977)

பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் பருத்தித்துறை

பதவி வெற்றிடம்

1) இரவு நேர பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
2) காரியாலய லிகிதர்

➡இரவு நேர பாதுகாப்பு சேவைக்கு பாதுகாப்பு சேவை நிறுவனங்களும், தனி நபர்களும் விண்ணப்பிக்கலாம்.

➡காரியாலய லிகிதர் ஓய்வுதியம் பெறுபவர்களும் விண் ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் சுய விபரங்களுடன் எதிர்பார்க்கும் மாதாந்த ஊழியம் என்பனவற்றுடன் 30.12.2010இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

தலைவர் / செயலாளர்
பருத்தித்துறை வர்த்தகர் சங்கம்
பருத்தித்துறை.

25.12.2010

தொடர்பு இல. - 0773222837
தொலைநகல் - 021 226 3652
(சி-1968)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஒரு தகவல்

இறைநேசர்

பதினோராம் நூற்றாண்டில் ஒரு புகழ்பெற்ற இறைநேசச் செல்வர் வாழ்ந்து வந்தார். அவருடைய பெயர் அப்துல்லா ஹிஸ் ஸவ்மயி (ரஹ்)

சோவியத் ரஷ்யாவில் உள்ள 'ஜீலான்' என்ற நகரத்தின் புறநகர்ப்பகுதியில் 'நீப்' என்ற ஊரில் தான் அவர் இருந்தார்.

அவருக்கு தஜ்லா நதியோரத்தில் ஒரு அப்பிள் தோட்டம் இருந்தது.

அந்தத் தோட்டத்தில் அவர் ஒருநாள் உலாவிக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் இருபது வயதுடைய அழகான இளைஞர் ஒருவர் அவருக்கு முன்னால் வந்து நின்றார்.

"என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும்" என்றார். இவருக்கு ஒன்றும் புரியவில்லை.

"யாரப்பா நீ? என்ன கெடுதல் செய்தாய்?

நான் எதற்காக உன்னை மன்னிக்க வேண்டும்?"என்று கேட்டார்.

"ஐயா, என் பெயர் அபுஸாலிஹ் மூஸா இங்கிருந்து 4 மைல் தொலைவிலுள்ள தஜ்லா நதியோரத்தில் தான் நான் இருக்கிறேன். நேற்று மதியம் எனக்கு நல்ல பசி. அந்தநேரம் ஒரு அப்பிள்பழம் நதியில் மிதந்து வந்தது. அவசரத்தில் அதை எடுத்து சாப்பிட்டு விட்டேன். சாப்பிட்டதற்குப் பின்தான் அப்படி செய்தது பெரிய தறறென்பதை உணர்ந்தேன். ஒரு பொருளுக்குரியவர்கள் யாரோ அவர்களின் அனுமதியில்லாமல் அந்தப் பொருளை உண்பது 'ஹராம்' ஆகும். 'ஹராம்' ஆன அந்தப்பழம் என் வயிற்றுக்குள் போனதிலிருந்து எனக்கு நிம்மதியில்லை. இரவு முழுவதும் தூங்கவே முடியவில்லை. காலையில் எழுந்ததும் இந்த நதியோரமாக பார்த்துக் கொண்டே வந்தேன். உங்கள் தோட்டத்தைப் பார்த்தேன். ஒரு மரத்தின் கிளை தண்ணீரைத் தொட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். அதனால் நான் சாப்பிட்ட பழம் இங்கே இருந்து தான் வந்திருக்க வேண்டும்.

அந்தப் பழத்துக்கு உரியவர் நீங்கள்தான். நீங்கள் என்னை மன்னித்தால்தான் நான் உண்ட பழம் 'ஹலால்' ஆகும். குற்றம் நிவர்த்தியாகும். தயவுசெய்து மன்னிக்கவேண்டும்"என்று கண் கலங்க கேட்டுக்கொண்டார். இதைக்கேட்ட 'ஸவ்மயி' ஆச்சரியத்துடன் அந்த இளைஞரை கூர்ந்து கவனித்தார்.

"இந்த அளவுக்கு நேர்மையான ஒரு நல்ல மனுஷனை விட்டு விடக் கூடாது"என்று மனதுக்குள் முடிவு செய்தார். நிமிர்ந்து அந்த இளைஞரைப் பார்த்தார்.

"இதற்கான தண்டனையை நீ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்" என்றார்.

"எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயார்" என்றார் அவர்.

"இதற்குத் தண்டனையாக 12 வருடகாலம் நீ இங்கே பணிவிடைகள் செய்ய வேண்டும்" என்றார்.

"பணிவிடை செய்வதை பாக்கியமாக நினைக்கிறேன்" என்று சொல்லிவிட்டு மகிழ்ச்சியோடு அந்தத் தண்டனையை ஏற்றுக் கொண்டார்.

12 வருடம் முடிந்தது. அந்த 12 வருடகாலத்தில் அந்த இளைஞரின் வயதும் தகுதியும் அதிகரித்தது. கடைசியில் அந்தப் பெரியவர் அந்த இளைஞரைக் கூப்பிட்டார்.

"இதோ பாரப்பா, இன்றுடன் உன்பணிவிடைக்காலம் முடிந்தது. ஆனால் தண்டனை இத்தோடு முடிந்து விட்டதாக நினைக்காதே. அது இன்னும் முடியவில்லை. கடைசியாக இன்னும் ஒரு தண்டனை பாக்கியிருக்கிறது. அதை நீ ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்றார்.

"எதுவாக இருந்தாலும் ஏற்றுக்கொள்வதற்கு சித்தமாக இருக்கிறேன்" என்றார் இவர்.

"எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவளுக்கு இரண்டு கண்ணும் தெரியாது. இரண்டு காதும் கேட்காது. இரண்டு காலும் செயற்படாது. அவளை நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும்" என்றார் பெரியவர்.

இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்காத இவர் திகைத்தார். அடுத்த நிமிடம் "சரி, இதையும் நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன்" என்றார்.

இறைநேசச்செல்வர் 'ஸவமயி'யின் புதல்வி பாத்திமாவுக்கும் இளைஞர் அடிஸாலிஹ் மூஸாவுக்கும் அடுத்த சில தினங்களில் முறைப்படி திருமணம் நடந்தது.

திருமணத்துக்குப் பின் மணமளைப் பார்த்த அந்த இளைஞர் திகைத்துபோய் நின்றார். ஏனெனில் அந்தப் பெரியவர் சொன்னதற்கு நேர்மாறாக இருந்தார். பாத்திமா உடல் ஊனம் எதுவுமில்லாமல் மிகவும் அழகாக இருந்தாள். மறுநாள் 'ஸவமயி'அபுஸாலிஹைக்கை அழைத்து விளக்கம் சொன்னார். என்மகளுக்கு கண் தெரியாது என்று சொன்னேன். எதுவித தீய காட்சிகளும் அவளுடைய கண்ணுக்குத் தெரியாது என்று அர்த்தம்.

காது கேட்காதென்று சொன்னேன். தீய விடயங்களை அவள் கேட்கமாட்டாள் என்று அர்த்தம். கால்கள் செயற்படாது என்று சொன்னேன். வீட்டைவிட்டு தீமையான இடங்களுக்கு அவள் போகமாட்டாள் என்று அர்த்தம் என்றார்.

"12 வருடங்களுக்கு முன் உன்னை முதன்முறையாக பார்த்த போதே உம்மை என் சீடராக மானசீகமாக ஏற்றுக்கொண்டேன்" என்ற விபரத்தைச் சொன்னார்.

இந்த இளைஞர் அபுஸாலின் பிற்காலத்தில் ஒரு பெரிய ஆன்மீக மேதையாக உயர்ந்தார். அந்தத் தம்பதியருக்கு 60 ஆவது வயதில் ஒரேயொரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைதான் ஆன்மீகப் பேரரசர் முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி(ரலி). இறைநேசச் செல்வர்களின் வாழ்க்கை தான் இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்ட வேண்டும். நாமெல்லாம் அப்படியா இருக்கிறோம்?

என்னுடைய சிநேகிதன் ஒருத்தன் சொன்னான்.

'டேய், என்னுடைய மாமனார் கூட தன்னுடைய பெண்ணை எனக்குத் திருமணம் செய்து தருவதற்கு முன் ஒரு செய்தியைச் சொன்னார். அது பொய் என்று அதற்குப் பின்னர்தான் தெரிந்தது" என்றார்.

"என்ன சொன்னார்?" என்று கேட்டேன்.

"என் மகள் மாதத்துக்கு ஒரு தடவை ஏதாவது கோபம் வந்தால் கையில் கிடைப்பதை எடுத்து உங்களின் மேல் எறிவா. நீங்கதான் அனுசரித்து போக வேண்டும்"என்றார்.

"அப்படி அவர் சொன்னது பொய்யா?"என்று கேட்டேன்.

"ஆமாம். மாதம் ஒரு தடவை என்று அவர் சொன்னது பொய். தினமும் ஒரு தடவை அப்படிச் செய்கிறார்"என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

புனர்வாழ்வு பெற்ற புலி உறுப்பினர்களுக்கு இரண்டரை இலட்சம் ரூபா கடனுதவி

அமைச்சர் சந்திரசிறி தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து சரணடைந்து புனர்வாழ்வு பெற்றவர்களுக்கும் புனர்வாழ்வு முகாம்களில் தொழிற் பயிற்சியைப் பெற்றவர்களுக்கும் இரண்டரை இலட்சம் ரூபாய் இலகு கடனுதவியை வழங்குவதற்கு புனர்வாழ்வு அதிகாரசபை முன்வந்துள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இந்துக்கல்லூரி மண்டபத்தில் யுத்தத்தால் சேத மடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான உதவி நிதிக் கொடுப்பனவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் சந்திர சிறி கஜதீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கே தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

புனர்வாழ்வு பெறும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் சமூகத்தில் நற்பிரஜைகளாக இணைந்து கொள்ள வேண்டும்.

இவர்களைச் சமூகமும் தங்களுடன் இணைத்துக் கொள்ள வேண்டும். இந்த இலக்கை அடிப் படையாகக் கொண்டே அரசாங்கம் செயற்படுகிறது. இதற்காகவே முன்னாள் விடுதலைப்புலிகள் உறுப் பினர்களுக்குப் புனர்வாழ்வு நடவடிக்கைகளும் தொழிற் பயிற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களில் மேலும் ஒரு தொகுதியினர் கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு விடுவிக்கப்படுகின்றனர். புனர்வாழ்வு அளிக்கப்பட்டு தொழிற்பயிற்சியைப் பெற்றுக் கொண்டவர்கள் சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவும் தொழில் முயற்சிகளில் ஈடுபடவும் உதவியாக இலகு கடன் அடிப்படையில் இரண்டரை இலட்சம் ரூபாய் வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த உதவியின் மூலம் இவர்கள் சுயமாகவே தொழில்களைச் செய்து கொள்ள முடியும். இந்தக் கடனுக்கு நான்கு வீத வட்டி மட்டுமே அறவிடப்படும். இந்தக் கடனைப் பெற்றுக் கொள்வோர் பத்து ஆண்டுகளில் இதைத் திருப்பிச் செலுத்தலாம்.

ஆகவே, இந்த நிதியுதவி என்பது கடன் என்று சொல்வதை விடவும் நிதியுதவி என்று சொல்வதே பொருத்தமானது. இதை விட பிற உதவித்திட்டங்களும் புனர்வாழ்வு பெற்ற விடுதலைப்புலிகள் உறுப்பினர்களுக்குக் கிடைக்கின்றது.

இந்த உதவியானது. எதிர்காலத்தில் போரினால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்த பெண்களுக்கும் புனர்வாழ்வு முகாம்களில் உள்ளவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை புனர்வாழ்வு அதிகார சபை மேற்கொண்டு வருகிறது என்றார். (ஸ்ரீ-2)

ஊர்காவற்றுறையில் மினிசூறாவளி

ஊர்காவற்றுறையில் கடந்த வாரம் வீசிய மினி சூறாவளியால் அங்கு சில இடங்களில் சேதம் ஏற்பட்டுள்ளது.

இம்மினிச் சூறாவளிக்காற்றால் சுகாதாரக்காரியால பெயர்ப் பலகை சேதமடைந்துள்ளதோடு அப்பகுதியிலிருந்த வாழை, முருங்கை, நிழல்மரவள்ளி, முள்முருங்கை போன்ற பல்வகை மரங்களும் வேருடன் சாய்ந்துள்ளன.

இதனால் கடற்றொழிலில் ஈடுபடும் படகுகள் கடல் கோட்டைப் பக்கமாக கரையொதுங்கியதாக தெரிய வருகின்றது. (ஸ்ரீ-4)

குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

மரக்கறி வகைகள்	நெல்லியடி	திருநெல்வேலி	யாழ்ப்பாணம்	சாவகச்சேரி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	180	180	160	150
உருளைக்கிழங்கு	65	70	80	70
பச்சைமிளகாய்	180	200	200	180
தக்காளி	70	70	80	100
மரவள்ளிக்கிழங்கு	40	40	50	40
கோவா	60	80	100	80
கரட்	40	80	100	90
பூசணி	25	50	40	40
புடோல்	60	100	120	80
வாழைக்காய்	30-40	40	50	50
சிண்ணவெங்காயம்	120-200	230	220	200
பெரியவெங்காயம்	200	170	200	180
பாகற்காய்	100	150	200	190
வெண்டிக்காய்	60	70	80	60
கருணைக் கிழங்கு	40	50	70	60
பயற்றங்காய்	190	150	200	200
லீக்ஸ்	90	120	140	120
பீற்றூட்	80	100	--	100
கறிமிளகாய்	200	200	250	200
முருங்கைக்காய்	170	250	--	--
போஞ்சி	80	100	100	110
கத்தரிதம்புள்ள	110	150	140	100
கீரை - 1 பிடி	20	50	50	35
தேசிக்காய்	80	100	100	90
தேங்காய்(ஒன்று)	45	50	50	45

இராசி பலன்

27.12.2010
(மார்கழி 12, திங்கட்கிழமை)
சப்தமி பின்னிரவு 1.37 மணிவரை
பூரம் முற்பகல் 10.18 மணிவரை
இராகுகாலம் 7.57-9.27 மணிவரை
சுபநேரம் 12.27-1.57மணிவரை

மேடம் சுய முயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து செயற்படுவர், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

இடபம் பணிபுரியும் இடத்தில் பெயரும், புகழும் கூடும், வாகனயோகத்தால் வளம் காணும் நாள், அஞ்சல் வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

மிதுனம் குடும்பத்தில் சிலரை திருப்திப் படுத்துவதற்காக முக்கியமான பொறுப்புக்களை கையேற்க வேண்டி வரலாம், தேவையற்ற பிரச்சினைகள் சுமுகமாக முடியும்.

கடகம் வருமானம் திருப்தி தரும், இல்லம் தேடி இனிய செய்தி வந்து சேரும் நாள், வாக்கு மேன்மையால் காரியங்களை சந்திப்பீர்கள், உறவினர் வருகையுண்டு.

சிங்கம் குடும்பப் பொறுப்புக்கள் கூடலாம், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர், திடீர் பயண வாய்ப்புக்கள் கை கூடலாம், சிந்தனை மிகுதியுண்டு.

கன்னி உறவினரை அனுசரித்துச் செல்வது நல்லது, காரிய அலைச்சலுண்டு, சுபசெலவுகள் ஏற்படலாம், இஷ்ட தெய்வத்தை வழிபட செல்ல வேண்டிய நாள்.

துலாம் போட்ட திட்டங்கள் நிறைவேறலாம், பணவரவு அதிகரிக்கும், பயணங்கள் மகிழ்ச்சியாக அமையும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள்.

விருச்சிகம் பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், தொழில் வளர்ச்சி மேலோங்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

தனுசு வீண் பழிகள் அகல விரைந்து முடிவெடுப்பீர்கள், உஷ்ண சம்பந்தமான நிலையுண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், திடீர் பயணங்கள் இடம் பெறலாம்.

மகரம் உடல்ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கூடிய கவனம் செலுத்தவேண்டிய தேவையுண்டு, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

கும்பம் கணவன்-மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடிவரும், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

மீனம் அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறும், பழைய கடன்களை சாதுரியமாகப் பேசி வசூலிப்பீர்கள், நினைத்த காரியம் எளிதாக நடைபெறும் நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, கிறிஸ்தவ உதவி நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் சொண்ட் மற்றும் ரி.ஆர்.ஆர்.ஒ.நிறுவனம் ஆகியன இணைந்து மேற்கொண்ட அனர்த்தத்தால் அழுந்தும் மனிதகுலம் எனும் தொனிப்பொருளில் அமைந்த ஊர்திக்கு இரண்டாம் பரிசில் கிடைக்கப் பெற்றது. இதில் அனர்த்தத்தால் அழுந்தும் மனிதகுல ஊர்தியையும் கிடைக்கப்பெற்ற பரிசிலுடன் சொண்ட் நிறுவன திட்டமுகாமையாளர் மற்றும் திட்டஇணைப்பாளர் ஆகியோரையும் இதனை உருவாக்கிய சொண்ட் மற்றும் ரி.ஆர்.ஆர்.ஒ. பணியாளர்களையும் படங்களில் காணலாம்.

கிராம மட்டங்களில் உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம் அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும்

கைத்தொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கிராம மட்டங்களில் உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம் அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும்.அதற்கு கைத்தொழில் பேட்டைகளை நிறுவவேண்டும் என கைத்தொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் எம்.கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

வதிரி தோற்பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற தொழிலாளர்களுக்கான கலந்துரையாடலின் போது உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், யாழ்.மாவட்டத்தில் நீண்ட காலத்தின் பின்பு அபிவிருத்திகளும், உற்பத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உற்பத்திகளை அதிகரிப்பதற்கு போதியளவு திட்டங்கள் கைத்தொழில் அபிவிருத்தி சங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எனினும் உற்பத்திகளை துரித கதியில் மேற்கொள்ள மூலப்பொருட்கள் பற்றாக்குறையுள்ளது.அத்தோடு இயந்திரங்களும் போதியளவில் இல்லை.நன்கு பயிற்சி பெற்ற தொழிலாளர்களும் பற்றாக்குறையாகவுள்ளது.

மேலும் வதிரி தோற்பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தை மேலும் விருத்தி செய்ய சிறந்த நிர்வாகம் உருவாக்கப்பட வேண்டும்.

தொழிலாளர்கள் பற்றாக்குறை, இயந்திரத்தில் பற்றாக்குறை என்பன நிவர்த்தி செய்யப்பட்டால் எதிர்காலத்தில் பாரிய உற்பத்தி நிலையமாக இவ் வதிரி தோற்பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் திகழும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் திடீரென வீதியில் குறுக்கிட்ட மாட்டுடன் மோதியதில் குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் புன்னாலைக்கட்டுவனில் இடம்பெற்றது.

இதில் காரைநகரைச் சேர்ந்த யோ. மயூரகுமரன் (வயது 32) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ஸ்ரீ-4)

நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய காசிநாதர் மண்டபத்தில் அதிபர் ந.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தனும் கௌரவ விருந்தினராக நிறுவுனர் குடும்பத்தைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் தம்பதிகள் மற்றும் வீரகேசரி பத்திரிகை நிறுவனத்தின் உதவி ஊடக முகாமையாளர் உமாசந்திரா பிரகாஸ் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் வெளியிடப்படும் 'மௌலீசம்' என்ற மலருக்கான மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக கல்வியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி வழங்குவார். (ஸ்ரீ)

திருக்குடும்ப திருவிழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புனித- யாகப்பர் ஆலயத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு பங்குத் தந்தை அருட்பணி ஜெயக்குமார் அடிகள் தலைமையில் திருக்குடும்பத் திருவிழா நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-4-72)

கூடைப்பந்தாட்ட மைதான திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் யா/ இராமநாதன் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதான திறப்புவிழா இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு அதிபர் திருமதி ஆ.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

துறைசார் விருந்தினர்களாக வலிகாமம் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசா, உடுவில் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் செல்வி மனோன்மணி சின்னத்தம்பி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2-9)

அன்னை ஸ்ரீ சாராதாதேவியின் 158 ஆவது ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 158 ஆவது ஜெயந்திவிழா இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு தாவடி மானிப்பாய் வீதி, தாவடியில் அமைந்துள்ள சமிதி மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் கலந்துகொண்டு குருதேவர் ஸ்ரீராம கிருஷ்ண பரமகம்சர், தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் நல்லாசிகள் பெற்றுக்கொள்ளுமாறு சமிதியினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன் அன்னையின் பாடல்கள், தூய அன்னையின் அமுதமொழிகள், நாடகம், ஆன்மீக உரை, பரிசு வழங்கல், தீபாராதனை ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-2-9)

காரைநகர் கல்விக் கோட்ட அலுவலகத் திறப்பு விழா

(காரைநகர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான தனியான கல்விக் கோட்ட அலுவலகத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கலாநிதி தியாகராஜ மத்திய மகாவித்தியாலயத்தில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இரா்தாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினர்களாக, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, சிறப்பு விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான மு. சந்திரகுமார் மற்றும் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், வட மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்,மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரட்ணம், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, காரைநகர் கடற்படைத்தளபதி, ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, யாழ்.மாவட்ட வலயத்தில் உள்ள ஏனைய வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2-243)

சபரி தரிசனம் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் இன்று காலை 7 மணிக்கு சிவபூதவராயர் தேவஸ்தானத்தில் இருமுடி கட்டி பேட்டை துள்ளல் நிகழ்வுகளும் மாலை 3 மணிக்கு திருமுடி யாத்திரையும் மாலை 4.30 மணிக்கு தேவஸ்தானத்தை வந்தடைந்து 18 படி ஏறும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து மாலை 5 மணிக்கு சபரி தரிசனம் நூல் வெளியீடு குருசாமி பிரம்ம ஸ்ரீ கி.அரிஹரசுதக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர் பொ.சந்திரசேகரம், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை நில அளவை அதிகாரி திருவருள் வ. ஆ. தங்கமயில், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் , வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் து.இளங்குமரன்,ஆசிரியர் இ.சத்தீஸ்வரன், கைதடி நவீல்ட் பாடசாலை ஆசிரியர் பொன். சிவகரன், சாவகச்சேரி செலிங்கோ ஆயுட் காப்புறுதி முகவர் பொ. யோகேஸ்வரா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் கௌரவ விருந்தினர்களாக நீர்வேலி ஐயப்பசாமி பிரம்மஸ்ரீ சா.சோம தேவாக்குருக்கள், சாவகச்சேரி சிவஸ்ரீ வி. பாலகுமாரக்குருக்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு ஐயப்ப ஜெயந்தி தின நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (ஸ்ரீ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து சபரிமலை யாழ்.கோண்டாவில் சபரீச ஐயப்ப தேவஸ்தானம்
இருமுடி கட்டு சிறப்பு மலர் – 27.12.2010

ஆதீன முதல்வரின் அருளாசியுரை

அன்புள்ளம் கொண்ட மெய்யடியார்களே!

இன்னல் வந்துற்ற போது இறைவா என்று வேண்டும் பிறப்பு மானிடச் சட்டை அணிந்த பிறப்பாகும். மானிடர்கள் இரு முடிசுமக்கும் சாமிகளாக இன்று யாழ். கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்திலே ஒன்று சேர்கிறார்கள். இருவினை களைந்தே எனை ஆட்கொள்ள வா!வா! என்று மனதார பிரார்த்தனை செய்கின்ற நிலை இந்த நேரமாகும்.சபரிமலை தர்மசாஸ்தாவின் பெயரால் கோண்டாவில் பதியில் எழுந்து அருளாட்சிபுரியும் ஐயன் சபரீசன் என்ற நாமம் பூண்டுள்ளான். சபரிமலை செல்பவர்கள், செல்லமுடியாதவர்கள் அனைவரும் தரிசனம் செய்யும் ஆலயமாக இன்று காட்சிதருகின்றது இவ்வாலயம்..

எங்கள் தீவினை அகன்றுநல்வினை பெருகுகின்ற நாளாக இன்றைய நாள் அமைய வேண்டும். இன்று இருமுடிசுமக்கும் சாமிமார்கள்,அவர்கள் குடும்பத்தவர்கள். இதில் பங்குபெறும் அடியார்கள் அனைவரும் மெய்யுருகி பிரார்த்திக்கும் நாளாக இன்று அமைய வேண்டுமென பிரார்த்தித்து அருளாசி வழங்குவதும் அவனருளேயாம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்,
நல்லை ஆதீனம்.

வாழ்த்துரை

ஐயப்பன் அருள் மருந்து. இருமுடி சுமந்து அவனருள் பெறுவோம்!

சாமிமார்களே! ஐயப்பனடியார்களே! வாரீர்! வந்தருள் பெறுவீர்!

ஐயப்ப சாமியாக மாறும் ஒவ்வொரு மானிடனும், அதனைப் பார்க்கும் மானிடர்களும் இருமுடி சுமந்து பெறும் பயன் என்னவென்றுணரவேண்டும். ஒழுக்கம் என்பது ஒருவருக்கு உயிரை விட மேலானதாகும். உடம்பைக் காப்பது உயிர்.அந்த உயிரைக் காப்பது ஒழுக்கம்.அந்த ஒழுக்கத்தை உயிரை விடக் காப்பது தான் உண்மையான, தவம்-பக்தி-உயர்வு ஆகும்.

ஐயப்ப விரதத்திலே முதற்படியாக இருமுடி கட்டி பதினெட்டுப் படியேறி சாமி தரிசனம் செய்து கொள்பவர்கள், தம் ஒழுக்கத்தை உயர்வாக மதித்து விரதபலனை நிலை நிறுத்த வேண்டியவராகின்றனர்.ஐயப்ப சாமிமார்கள், அடியார்கள் அனைவரும் ஒழுக்கசீலர்களாக வாழ்ந்து பிறந்தபலனை பெற்றுய்ய வாழ்த்துகின்றேன்.

திரு.க.நித்தியானந்தன் சாமி
வத்தளை கிராமசேவை அலுவலர்,
15, வோல்ஸ் லேன், கொழும்பு-15.

இருமுடி சுமந்து வாறோம் சாமி ஐயப்பா!
தரம் 1 – க.பொ.த (உ/த) வரையான
கலை, கணித, விஞ்ஞான,
வர்த்தக வகுப்புக்கள்
யாழ்நகரில்
ஒரே இடத்தில் நடைபெறும் மாபெரும்
கல்விநிறுவனம்
புதிய **நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தி வீதி,
யாழ்ப்பாணம்



ஆசியுரை

ஓம் வெள்ளப்பள்ளத்து வீரகத்தி விநாயகனே சரணம் ஐயப்பா

இருமாதம், இருமுடி, இரு ஒன்பதுபடி இருஇறை, ஓர் ஒளி–இறைவன் ஒருவன்.

சைவ சமயத்தில் சைவ சித்தாந்த தத்துவத்தில் இறைவன் ஒருவன். இவற்றை வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் உறுதி செய்கின்றன.

குருவே ஆத்மா! குருவே உயிர்! குருவே சிவன்
குருவே தெய்வம், குருவே சிவம் எனக்கூறினன் நந்தி.

குருவினூடாக இறைவனைக் காணலாம்.இங்கு இருமுடி சுமக்க இருமாத விரதம், இரு ஒன்பது படி ஏறி இரு இறை இணைந்து தோன்றிய தோற்றம் சபரியில் தோன்றிய பேரொளியான ஓர் இறை தர்மசாஸ்தா.இப்பேரொளியை க்காண கடைப்பிடிக்க வேண்டியவை அத்தனையும் மனிதனில் இருக்கக்கூடாதவை எவையோ அவைகளாகும்.

விரத அனுட்டான விதிகளை நெறிமுறையாகக் கடைப்பிடித்தவர்கள் ஐயனைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் மல்குவர்.இக்காட்சியே இன்றைய இருமாத விரதமிருந்து, இருமுடி தரித்து, இருஒன்பது படிஏறி இருமூர்த்தி மைந்தன் ஒருமூர்த்தி ஐயப்பனை காண்பதாகும்.இக்காட்சியைக் காணும் அனைவருக்கும் நல்லாசி கிடைக்கப் பிரார்த்தித்து ஆசி கூறுவதும் ஐயன் அருளேயாம்.

''சபரீஷவாசம்''

ஈழவூர் சைவப்புலவர்,சிவஸ்ரீ குமாரசாமி, சுமுகலிங்கம்சாமி,
கோப்பாய்.

இருமுடியின் புனிதத் தன்மைகள்

மாலையணிந்து விரதமிருக்கும் ஐயப்ப சுவாமிமார்கள் கண்டிப்பாக இரு முடி கட்டி பதினெட்டாம் படியேறி நெய் அபிஷேகம் கண்டிப்பாகச் செய்ய வேண்டும்.இவ் ஐயப்ப விரதத்தில் இருமுடி கட்டுதல் மிக முக்கியமான தொன்றாகும். இருமுடி என்றால் முக்கண்கொண்ட தேங்காய் சிவனைக் குறிக்கும், பசுநெய் கோபாலனாகிய மகா விஷ்ணுவைக் குறிக்கும். சிவன் , விஷ்ணு இவருடைய அருள் கதிரொளியின் கூட்டு சக்தியே சாஸ்தாவாகிய ஐயப்பனாதலால் நெய்யும் தேங்காயும் சேர்த்து அவருக்கு நிவேதனப் பொருட்களாகின்றன. இதனையே இருமுடி எனக் கூறுவர்.

முன்முடியிலே ஐயனுக்கு அபிஷேகம் செய்கின்ற நெய்த் தேங்காயையும், பின் முடியில் மஞ்சமாதா, வாபர் சுவாமி வேண்டுதல்களுக்கான தேங்காய்கள், பூசைப்பொருட்களுடன் சுயதேவைக்கான பொருட்கள்வைக்கப்படுகின்றன.இறைவனை அடையும் நிலையை உணர்த்துவது மானிடராய் பிறந்தநாம் இறைவனைத் தேட ஆரம்பிக்கும் போது இறைவன் மீதுள்ள பக்தி ஒரு முடியாகவும், நம் உலகத் தேவைகளாகிய லௌகீகம் ஒரு முடியாகவும் இருக்கின்றது. இரண்டு அம்சங்களுடனேயே நாம் இறைவனைத் தேட ஆரம்பிக்கின்றோம்.அந்தத் தேடலில் மெஞ்ஞானம் கிட்டக்கிட்ட தம் லௌகீகப் பற்று குறைந்து, மறைந்து போகிறது. இறைபக்தி ஒன்றுதான் மிஞ்சுகிறது. அப்பொழுது தான் இறைவனடியும் தரிசனமாகிறது.

எங்களுடைய விரதத் தன்மையை இரு முடியிலே அடைக்கின்ற நெய்யிலே தெரிந்து கொள்ளலாம். இரு முடியில் இடப்படுகின்ற அரிசி, ஐயப்பனின் அன்னதானம் மற்றும் பிரசாதங்களுக்குச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றது.மற்றும் ஏனைய பொருட்கள் அபிஷேகத்திற்கும் வனதேவதைகளுக்கும் செலுத்தப்படுகின்றன. விரதமிருக்கின்றவர்கள் இரு முடியை நேர்த்தியாக தலையில் சுமந்து தங்களுடைய வேண்டுதல்களை நிறைவேற்றுகின்றனர்.இருமுடியில் காணிப் பொன் (சில்லறைக் காசு) சேர்க்கப்பட்டு உண்டியலில் இடப்படுகிறது. இதுவே இருமுடியின் தத்துவமாகும்.

சுத்தமான நெய்யை தேங்காயில் விட்டு ஐயனுக்கு அபிஷேகம் செய்யும் போது நெய்யானது தேங்காய் வடிவில் கட்டியாகக் காணப்படுமாயின் விரதம் பூரணத்துவமடைந்துள்ளது என்பதனை அறியலாம்.

குருசாமி கி.அரிகரசுதகுருக்கள், ஈழத்துச் சபரிமலையா/ கோண்டாவில் சபரீச ஐயப்பன், தேவஸ்தானம்.

இருமுடி சுமப்போம் தரிசனம் பெறுவோம்

நெய் மணக்கும் , மனதை நெக்குருக்கும்.பக்திச் சபரிமலைக்கு ,திருமுடியாம் இருமுடி தரித்து, சாமி சரணம் ஐயப்பா சரணம் என்று பக்த கோடிகள் மனிதப் பிறப்பின் பூரணத்துவமாய முத்திப் பேற்றுக்கு முயலும் முன்மாதிரி என்றுணர்த்தும் குறியீடாக ஹரிஹரபுத்திர மணிகண்டன் விரதத்தின் பதினெட்டுப் படிஏறும் பக்குவத்தின் வகிபாகம் என்று உணர்ந்தார் இவ்வுலகில் உய்ந்தார்.

இவன் திருமுடி அவாவும், திருமுடி பணியும்
திருவருள் வ.ஆ.தங்கமயில்

இருமுடி தாங்கி ஒருமனதாகி குருவென
வந்தோம் சபரீசனே! சரணம் ஐயப்பா!
தரங்குன்றாத் தங்க நகைகளின் வடிவமைப்பாளர்
சி.செந்தில்குமரன்
பூநாறி மடத்தடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

கன்னிமூல கணபதியை வேண்டி
கழுத்தில் மாலை அணிந்து கடும்விரதம்
இருந்து இருமுடி சுமந்து
இறை இன்பம் பெறும் ஐயப்பசாமி
மார்களின் இன்னல்களை இன்றே
களைந்திடப்பா! ஈழத்து சபரிமலை
தர்மசாஸ்தாவே ! சபரீசனே!
சரணம் சாமிசரணம்! சரணம்
ஐயப்பா சரணம்!
திரு.திருமதி துசீந்தன் மோகனா
குடும்பத்தினர்.

இருமுடி திருமுடி அருள்முடி ஆனந்தமுடி
சுமக்கும் சாமிமார்களுக்கு ஐயப்பனின்
அருள்பெற வேண்டி பிரார்த்திக்கின்றோம்
அனைத்து வகை பல்வகைப் பொருட்
களையும் ஒரே இடத்தில் தெரிவு
செய்ய நாடவேண்டிய இடம்
விநாயகர் வாணிபம்
பலாலி வீதி,
கோண்டாவில்.

எங்கும் நிறைந்தவனாம்! எதிலும் இருப்பவனாம்! எருமேலி சாஸ்தாவாம் எருமேலி பேட்டைதுள்ளும் சாமிமார்கள் துயர் துடைக்க எழுந்தோடிவாரும் சபரீசனே
காலை, மதியம்,மாலைசைவ உணவுகள்
சிற்றுண்டி,கைகளைமிகுந்த சுவையுடன்
பெற்றுக் கொள்ளநாடவேண்டிய உணவகம்
ஸ்ரீ சரவணபவன்
சைவ உணவகம்
195, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

அரிஹரசுதனேசரணம் ஐயப்பா!
இருமுடி சுமந்து வாறோம் சாமி ஐயப்பா!
நம்பிக்கை நாணயம் உத்தரவாதம்
புதிய புதிய வடிவமைப்புக்களையும்
தேவைகளையும் நிறைவாகப் பெற
அரிஹரன்
நகைத்தொழிலகம்
கனகபுரம் சாலை,
கிளிநொச்சி.

சாமி நாமம் சொல்லு! சரணகோசம் போடு!
ஓடிவருவார் சாமி சபரீசன் ஓடிவருவார்.
அனைத்து வகையான பல்பொருட்களின்
தேர்வுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்
ஸ்ரீவக்சன்
பல்பொருள் வாணிபம்
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.

இருமுடி சுமந்து வருகிறோம்பாசாமி ஐயப்பா!
மனமிரங்கி வரவேணும் சாமிஐயப்பா!
22 கரட் தங்கநகைகளை இன்றே
வேண்டிய வடிவமைப்பில் பெற்றிட
கஜிலா ஜீவலரி
பருத்தித்துறை வீதி, சட்டநாதர் சிவன்கோவில்,
கல்வியங்காடு.தொ.பே0777174895

ஈழத்து சபரிமலை தர்மசாஸ்தாவே சரணம் ஐயப்பா!
அழகுசாதனப்பொருட்கள்,அன்பளிப்புப்பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள் மற்றும் கவல்சோப, யூஸ்
ஐஸ்கிறீம், பிஸ்கட்வகைகள் என்பவற்றைப் பெற்றுக்
கொள்ள
மித்திரன் மல்டி சொப்
தெல்லிப்பளை வீதி (யாழ்ப்பாணக் கல்லூரிக்கு
அருகாமை),வட்டுக்கோட்டை.

இரு முடிசுமந்து வாறோம் சாமியே ஐயப்பா
இரு வினை தீர்த்தருளும் சாமியே ஐயப்பா!
அழகிய நவீன டிசைன்களில் தங்க
நகைகளைப்பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ரதி ஜீவல்லரி
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சு.வரதகுமார் இயக்கிய குறும்படங்களின் வெளியீட்டுவிழா அண்மையில் வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வவுனியா நகரசபை உபதலைவர் எஸ்.ரதன் மங்கல விளக்கேற்றுவதையும் ஆசிரிய ஆலோசகர் கி.உதயகுமார் குறும்படத் தயாரிப்பாளர் சு.அமிர்தலிங்கத்திற்கு ஊக்குவிப்பு பரிசினை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

கட்சித் தலைமைப்பதவிக்கு போட்டியிடுவது குறித்து சஜித் பிரேமதாஸ கவனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சஜித்பிரேமதாஸ கட்சித் தலைமை பதவிக்காக போட்டியிடுவது குறித்து கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சித்தலைமைப்பதவிக்காக போட்டியிடப் போவதாக சஜித் பிரேமதாஸ இவ் வாரம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்கவிடம் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படு கிறது.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு சிரேஷ்ட தலைமைத்து வப்பதவி ஒன்று வழங்குவதற்கான முனைப்புக்கள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக கட்சியின் முகாமைத்துவக் குழு செயலாளர் போதி ரணசிங்க தெரிவித்துள்ளார். இதே வேளை சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு வழங்குவோரில் 95 வீதமானவர்கள் கட்சித் தலைவர் பதவிக்காக போட்டியிட வேண்டும் என விரும்புவதாகவும் ஏனையவர்கள் 2011 ஆம் ஆண்டு நிறைவு வரையில் பிரதித் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ள வேண் டும் என விரும்புவதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

எனவே கட்சித் தலைமைப்பதவிக்காக போட்டியிடுவது என சஜித் பிரேமதாஸ தீர்மா னித்துள்ளார். விரைவில் இரகசிய வாக் கெடுப்பு நடத்தப்படக்கூடிய சாத்தியம் காணப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

கிளி. மாவட்ட செயலகத்தில் தொழில் வங்கி ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலக திட்டமிடல் பிரிவினரால் தொழில் வங்கி ஒன்று அண் மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தகைமையுள் ளோருக்கு வேலைவாய்ப்பை பெற்றுத்தரும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவே இத்தொழில் வங்கி ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

இதுவரை இத்தொழில் வங்கியில் பதி வினை மேற்கொள்ளாதவர்கள் தங்களது பதிவுகளை மேற்கொள்ளலாம் என மாவட்டச் செயலக திட்டமிடல் பிரிவினர் அறிவித்துள் ளனர்.

(ஸ்ரீ-4-30)

நீர்வேலி காமாட்சியம்பாள் கூட்டுறவு கைத்தொழில் சங்கத்துக்கு 7மில்.நிதியுதவி

யாழ். மாவட்டத்தில் கைத்தொழில் அபி விருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரு கிறது. அதனடிப்படையில் நீர்வேலி காமாட்சி யம்பாள் கூட்டுறவுக் கைத்தொழில் சங்க அபிவிருத்திக்கு 7 மில்லியன் ரூபா நிதி ஒதுக் கீடு செய்யப்படும் என பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபி விருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்துள்ளார்.

நீர்வேலி கமாட்சியம்பாள் கூட்டுறவு கைத்தொழில் சங்கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கைத்தொழில் நடவடிக்கைகளை அபி விருத்தி செய்ய இயந்திரங்கள் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. இந்த வருட இறுதிக் குள் இயந்திரக் கொள்வனவுகள் மேற்கொள் ளப்படும் அதேவேளை தளபாடங்கள் கொள் வனவு செய்வதற்கும் திட்டமிட்டுள்ளோம்.

கைத்தொழில் நடவடிக்கைகள் பாதிப் படையாத வகையில் அவைகள் பாதுகாக்கப் படவேண்டியது அவசியமானது. அத்தோடு பொலிஸ் காவலாளிகள் பாதுகாப்பில் ஈடு படுத்தப்படவேண்டும் என அவர் மேலும் தெரி வித்தார். (ஸ்ரீ-6)

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளை நாடு கடத்துவோருக்கு வலை வீச்சு

(கொழும்பு)

இலங்கையில் இருந்து அகதிகளாகச் சென்று தமிழக முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு அவுஸ்திரேலியாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக அவர் களை நாடு கடத்தும் முயற்சியில் ஈடுபட் டுள்ள ஆட்கடத்தல்காரர்கள் சிலருக்கு இந் திய கியூ புலனாய்வுப் பிரிவு வலை வீசியுள் ளது.

சட்டவிரோதமாக படகுகள் மூலம் குறித்த மக்களை அவுஸ்திரேலியாவுக்கு நாடு கடத்து வதற்கான மேற்படி ஆட்கடத்தல்காரர்களால் உறுதியளிக்கப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைக்கப் பெற்றுள் ளதாக அப்பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு வேறு நாடுகளின் பிரஜாவுரிமையை பெற்றுக்கொடுப்பதாக குறித்த முகாம்களில் வாழும் இலங்கையர் களை நாடு கடத்தும் முயற்சியில் ஈடுபட்ட தாகக் கூறப்படும் ஆட்கடத்தல்காரர்கள் 50 பேர் கடந்த 5 வருட காலங்களுக்குள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவ் அதிகாரி தெரிவித்தார்.அத்துடன் இலங்கைத் தமிழர் களை அவர்களது தாய் நாட்டுக்கு அல்லது வேறு நாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி அம்மக்களிடம் பணம் வசூலித்ததாக கூறப்படும் ஆட்கடத்தல் முகவர்கள் நால் வரை கடந்த ஞாயிற்றுக்கிழமை இராம நாதபுரத்தில் வைத்து கைது செய்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

புதிய வீடுகளை நிர்மாணிப்பது குறித்தே கூடுதல் கவனம் செலுத்தப்படும்

இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் புதிய வீடுகளை நிர் மாணிப்பது குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படும் என இந்திய உயர்ஸ்தானி ராலயம் அறிவித்துள்ளது.

5ஆயிரம் வீடுகள் புதிதாக நிர்மாணிக்கப் படவுள்ளதாகவும் 45 ஆயிரம் வீடுகள் திருத் தப்படவுள்ளதாகவும் இலங்கை அரசாங்கம் அண்மையில் தகவல் வெளியிட்டிருந்தது.

எனினும் சேதமடைந்த வீடுகளை திருத் துவதை விடவும் புதிய வீடுகளை நிர்மாணிப் பதில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள் ளது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்காக இந்த வீடுகள் நிர்மாணிக்கப் படவுள்ளதாகவும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியா விஜயம் செய் திருந்த போது இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன் பாட்டுக்கு அமைய இந்தத் திட்டம் முன் னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகி றது.

இதேவேளை வடக்கில் புதிய கட்டட நிர்மா ணம் தொடர்பாக் பொருளாதார அமைச்சு அறிவித்துள்ள விதிமுறைகள் இந்திய வீட மைப்புத் திட்டத்தை பாதிக்காது என அறிவிக் கப்பட்டுள்ளது.

வடக்கில் புதிய வீடமைப்பு திட்டங்கள் மேற் கொள்வதற்கு அனுமதி அளிக்கப்படமாட் டாது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்திருந்தது.

எனினும் இந்த உத்தரவு தமது வீடமைப் புத் திட்டத்தை பாதிக்காது எனவும் திட்டமிட் டதன் பிரகாரம் 50 ஆயிரம் வீடுகள் நிர்மா ணிக்கப்படும் எனவும் இந்திய உயர்ஸ்தானி கராலயத்தின் அரசியல் செயலாளர் சிறிவட்சா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட குறுநாடகப் போட்டியில் வவுனியா நகர தேசிய இளைஞர் சேவைகள் மன் றத்தின் தயாரிப்பாளர் சு.வரதகுமார் இயக்கிய *எங்களுக்காக* என்ற குறு நாடகத்திற்கு தேசிய விருது கிடைக்கப்பெற்றது. இந்நாடக காட்சியினை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்காட்டு



கவிப்பேரரசு வைரமுத்து

இயற்கைதான் மனிதனின் ஆசான். தன் இருப்பு அசைவு இரண்டிலும் அறிவு போதிக்கிறது அது. வானமும் பூமியும் வகுப்பறைகளாய் யுகந்தோறும் யுகந் தோறும் அது பாடம் நடத்திக் கொண் டேயிருக்கிறது.

புத்தியுள்ளவன் புரிந்து கொள் கிறான்; வலியுள்ளவன் அறிந்து கொள்கிறான்; மனிதனின் படைப் பென்று பூமியில் ஏது மில்லை.

மனிதன் வெறும் கண்டுபிடிப் பாளனே தவிரப் படைப்பாளன் அல் லன். அப்படிப் பார்த்தால் மொழி ஒன்றுதான் மனிதனின் படைப்பு. மொழிகூட ஒலி யின் வரிவடிவம் தான். ஒலி மனிதனின் படைப்பல்ல; கண் டுபிடிப்புதான்.

ஒவ்வொரு கண்டுபிடிப் புக்கும் பின்னால் ஏதோ ஒரு வலி இருந்தே தீரும். வலி சொல்லிக் கொடுக் கும்; வலி கண்டவன் அறியக்கடவன்.

மஞ்சங்காட்டோடையில் ஈத்துவலி யெடுத்துப் படுத்துக்கிடந்த பசுவைப் பேயத்தேவர் கண்ணளந்தார் நிதானமாக.

கண்ணீரில் பீழை வழிய பார்வையில் வலி பரப்பி அது பார்த்தது பேயத் தேவரை.

சொட்டையன் பேச்சைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் கீழே குனிந்து மணலில் அமர்ந்து பசுவின் கோணக் கொம்பு பிடித்துயர்த்தித் தாடைதடவி, பசுவுக்கொரு ஆசுவாசமும் நம்பிக்கை யும் கொடுத்துக் காதுகளின் உட்பக்கம் கைவைத்துப் பார்த்தார் பேயத்தேவர்.

காய்ச்சல் இருந்தால் காது கதகத வென்று காந்தும். அதனாலும் வலி யெடுக்கும். இப்போது காய்ச்சல் இல்லை. வந்தவலி ஈத்துவலிதான். ஆனால் பசு ஓரிடத்தில் நிலை கொள் ளாமல் மருகி மருகி இடம்மாறிப் படுத் தது. வலி வந்து வந்து போகிறதென்று புரிந் துவிட்டது அவருக்கு.

"என்னாச்சோ... ஏதாச்சோ..." முனகினார் பேயத்தேவர்.

"அந்த வைரவனும் சீலக்காரியும் தான் எம் பசுவையும் கன்டை(கன்று)யும் காப்பாத் தணும்..." என்று சொட்டையன் வானம் நோக்கிக் கும்பிட்டான் .

"பெருசு...கன்டு வகுத்துக்குள்ள செத்துக் கித்துக்கெடக்குமோ?"

பேயத்தே தவர் நினைத்தும் சொல்லாததை நடுங்கும் குரலில் கேட்டே விட்டான் சொட் டையன்.

"யாருக்கு என்ன பாவம் பண்ண...? அப் படியெல்லாம் ஒண்ணும் ஆகாதப்பா..." என்றார் பெருசு ஆறுதலாக.

"ம்மா..." என்று இருமுறை அலறி தன் பின்புறமெல்லாம் தரையில் போட்டு முன்பக்கம் வலிகாட்டி முனகியது பசு.

சினைப்பசுவுக்குள் கன்று செத்துக்கிடந்தால் உடனே எடுத்துவிடுவது உத்தமம். இல்லை யென்றால் தாய்ப்பசுவையும் செத்த கன்று கொன்றுவிடும்.

4

மகிழ்ச்சிதருவது பசுதான். காரணம்-ஒரு பெண், பெண்சிசுவைப் பிரசவித்தால் இடிவிழுந்து வீடாகிவிடுகிறது குடியானவன் வீடு. அவர்களின் சமூக வாழ்வில் ஆண் வரவு; பெண் செலவு.

பசு அப்படியில்லை. அது காளங்கன்று ஈன்றாலும் கிடரிக்கன்று ஈன்றாலும் வறுமையின் வாசலுக்கு அது வரவு தான். 'ஒரு மாடு குடும்பங்காக்கும்; ஒன்பது மாடு குலங்காக்கும்' என்பது விவசாய வாழ்வில் வேரோடிய நம்பிக்கை.

ஒரு முருங்கை மரம்-ஒரு பசு-ஒரு வெட்டரிவாள் மூன்றுமிருந்தால் எண்பது சதுர அடியில் அறுபது வருடங்களைப் பத்து மைல் சுற்றளவில் வாழ்ந்துவிட்டுப் போய்விட முடிகிறது.

தன் முயற்சியல் சற்றும் மனந்தளராத

இதிகாசம்

"சொட்டையா... ரெண்டு சேதி சொல்றேன் ஒனக்கு. ஒரு சேதி நல்ல சேதி..."

"சொல்லப்பா... சொல்லு..."

"கன்டு செத்துப் போயிருந்தா குளுந்து கெடக்கும் 'கன்டு' கதகதப்பா இருக்கப்பா... சாகல..."

"நாஞ்சொல்லல... அந்த வைரவனும் சீலக்காரியும்..." என்று வானம்பார்த்த சொட் டையன் கம்போடு சேர்த்து மூன்றுகை உயர்த் தினான்.

"இன்னொரு சேதி சொல்றன் கேட்டுக்க. தலை மாடு கால்மாடா கால்மாடு தலைமாடா 'கன்டு' எடம்மாறிக்கெடக்கு."

"யாத்தே!" என்றலறிய சொட்டையன் "எப் படியாச்சும் எங்குடும்பத்தைக் காப்பாத்து பெருசு" என்று பதறினான்.

சொட்டையன் சொன்னது பொய்யில்லை. விவ சாயக் கலாசாரத்தில் ஆடுமாடுகள் குடும் பத்தின் அங்கம்.

பிள்ளைகளைப் போலவே ஆடுமாடு களுக்குப் பெயர் வைப்பதும்- தான் பசித்திருந் தாலும் தன் ஜீவராசிகள் பட்டினி கிடக்காமல் பார்த்துக்கொள்வதும்- ஆடு மாடுகள் செத்தால் ஆளாளுக்கு இழவு கேட்பதும்-கள்ளிக்காட்டுக் கலாசாரம்.

பெண்ணுக்கும் பசுவுக்கும் ஒரே நேரத்தில் பிரசவவலியெடுத்தால் பெண்ணைவிடவும் பேயத்தேவர், தண்ணி இருக்காடா "தண்ணி...? ஊத்துங்கடா பசுமேல..." என்று உத்தர விட்டார். தூக்குவாளியிலிருந்த தண்ணீரைத் தூக்கி ஓடிவந்து பசுவின் அடிவயிற்றில் அடித் தான் சொட்டையன்.

இறுக்கமாயிருந்த பசு அந்தச் சில்லிப்பில் சிலிர்த்து அதிர்ச்சியில் நெகிழ்ந்து கொடுத்தது. அந்த நெகிழ்ச்சியின் நிமிடங்களில்...

வயிற்றுக்குள் கல்லாய்க் கிடந்த கன்று கனிந்து இளகலாயிற்று...

"சாமி... என் பசுவக் காப்பாத்திட்ட சாமி..." -கத்தினான் சொட்டையன் காடுகிழிய.

அறுபடாத தொப்பூழ்க்கொடியைக் கட் டைவிரல் நகத்தில் கிள்ளிக் கன்றுக்கு முடி போட்டதில் கடமை முடிந்தது.

வெயில் தாழ உழவுமுடித்து, ஏர் அவிழ்த்து, கலப்பையைத் திருப்பி நேர்க்காலில் மாட் டிவிட்டு, அங்கங்கே தட்டுப்பட்ட முள்விறகு சேர்த்து அதைக் கயிறுகட்டி இழுத்துக் கொண்டே விளக்கேற்ற வீடுவந்து சேர்ந்தபோது மாடக்குழியோரம் சுவரில் முதுகுசாய்த்துக் கால் நீட்டி அமர்ந்திருந்தாள் செல்லத்தாயி, பேயத்தேவரின் மூத்த மகள்; பிரசவத்திற்கு வந்திருப்பாள் போலிருக்கிறது. ஆனால் அவளுக்கு அது 'இரண்டாம் தலைப் பிரசவம்'.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார மையவிசையாக தொழிற்படும் வங்கித்துறை

கடந்த 19ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரியின் யாழ்.நகர கல்லூரி மண்டபத்தில் யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மூத்த வங்கியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் மா. சின்னத்தம்பி ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது.

"எனது மூளையும் உனது பணமும்" என்று சொல்வது போல் வங்கிகள் இயங்குகின்றன. தேங்கி நிற்கும் நீர் ஆறுபோல் அசைந்தால் தான் பயன், பலம், சமூக மேம்பாடு ஏற்படும். இது போல் மிகையாக சிலரிடம் பதுக்கலாக அமையக்கூடிய பண இருப்பை தேவைப்படுவோருக்கு - பணத்தைப் பயன்படுத்த துடிப்போருக்கு - துணிவுடன் முதலிட முயல்பவர்களுக்கு கைமாற்றும் நிறுவனங்கள் தான் வங்கிகள்.

இதனால் வியாபார உலகினையும் , உற்பத்தி வலயங்களையும் உயிர்த் துடிப்பு மிக்கனவாக மாற்றிவிடுவன இந்த வங்கிகள் தான். வங்கிகளை பலமாதங்கள் மூடினால் இந்தப் பொருளாதார செயற்பாடுகள் அனைத்தும் உறங்கிவிடும். இத்தகைய பொருளாதார மைய விசையான வங்கித் துறையை தொழிற்படுபடுத்துபவர்கள் வங்கியாளர்கள்.

இன்று வங்கித்துறை பெரிய மாற்றங்களுக்கு உட்பட்டுவிட்டது. அதன் கட்டமைப்பும், முகாமையும், தொழிற் படும் பாங்கும் மாறிவிட்டன.

முன்பெல்லாம் மரபுவழி வங்கி முகாமையாளர்கள் மூடிய அறைகளில் இருந்தனர். சற்று இறுக்கமான முக வெளிப்பாடுகளையும் கொண்டிருந்தனர்.பலர் சட்டபூர்வமாக மாத்திரமே உரையாடுவர்; சிரித்துப் பேசுவது கூட பெரிதாக விரும்பப்படுவதில்லை. இதனால் மிகவும் இறுக்கமான படி முறை ஏற்பாடுகளையும் பணித்துறை ஒழுங்கையும் கொண்டிருந்த வங்கிக ளில் பணியாளர்களும் கடுமையானவர்களாகவே இருந்தனர்.

இன்று வங்கிமுறை வெகுவாக மாறிவிட்டது.உலக மயமாதலும் தகவல் தொழில்நுட்ப ஏற்பாடுகளும் ஒரு கணனியிலான தொடுகைமூலம் உலகின் எந்த மூலையிலிருந்தும் பணத்தை வங்கி பெற்றுக்கொள்ள முடிகிறது. சில இலக்கங்களை சொல்வதன் மூலம் எவரும் பணத்தை பிறநாடுகளிலிருந்து பெறமுடிகின்றது.

வங்கி முறையின் பலம் அதன் தகவல்களின் இரகசியத்தன்மை தான். தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகளில் இரகசியம் பேணமுடியாத உலகின் போக்கு வங்கிமீதும் நெருக்குதல்களை ஏற்படுத்தி விடுமா என்ற கேள்வியும் எழுகின்றது.'விக்கிலீக்ஸ்' குழப்பங்களும் ஜூலியன் அசேஞ்ச் பற்றிய அதிர்வுச் செய்திகளும் தகவல்கள் திறந்தனவாக்கப்படுவதைக் காட்டுகின்றன. வங்கிகள் இரகசியம் பேணவல்லனவா என்ற கேள்வியும் எழுகின்றது.

முன்பு தெற்குலக நாடுகளிடமிருந்து வடக்குலகிற்கு பணமும் செல்வமும் சென்றன. இன்று உழைப்பாளர்கள் தெற்குலக நாடுகளிலிருந்து மத்திய கிழக்கிற்கும் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கும் செல்கின்றனர்.இதனால் உலகின் பல நாடுகளிலிருந்தும் நாணயப் பாய்ச்சல் ஏற்படுகின்றது. இதனை தனியார் மாற்றங்கள் என்கிறோம். இது வங்கியின் புதிய நிதிமூலமாகி வங்கிகளைச் செழுமைப்படுத்துகின்றன.

1987 காலப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நெருக்கடிகள் பல முனைகளினதும் கூர்மை பெற்றபோது ஒவ்வொரு வங்கியும் ஒவ்வொரு நடைமுறையைப் பின்பற்றுவதில் இடர்பாடுகள் இருந்தன. இந்த நிலைமை நோய் பரவும் போது மருந்து கண்டறியும் விஞ்ஞானிக்குரிய நிலைமையை ஒத்த சூழலை உரு வாக்கிற்று.

இந்தப் பின்னணியில் உருவான யாழ்ப்பாண மாவட்ட வங்கியாளர் சங்கம் ஓய்வுபெற்ற மூத்த வங்கியாளர்களை கௌரவிக்கும் நடைமுறையை கையாளத் தொடங்கியது. இது பல வருடங்களாகத் தொடர்கின்றன. இது மகிழ்ச்சி தரும் வளர்ச்சியா கும்.

தற்போது வங்கிகளில் பணி புரிபவர்கள் ஓய்வுபெற்றவர்களைக் கௌரவிக்கும் புதிய பெருமைக்குரிய பண்பாட்டை தொடங்கினார்கள். இது ஒரு முன்னோடி செயல்; பண்பாட்டுக்கு புதிய முகவரியை இந்த வைபவம் வழங்குகின்றது.

நெருக்கடி மிக்க கால கட்டத்தில் எமது பண்பாட்டின் மற்றொரு மாண்பை இச் சங்கம் தொடங்கியமை பாராட்டுதற்குரியது.

பின்னர் அரச வங்கிகள் ஓய்வூதியர் நலமேம்பாட்டுக்காக தனித்தனியான சங்கங்களை உருவாக்கி வளர்ந்துள்ளன. எனினும் எல்லா வங்கிகளினதும் வங்கியாளர்களை ஒன்றிணைத்து பாராட்டும் செயல் புனிதமானது ; மேன்மையானது.

எழும்போதே வாழ்த்தும் இப் பண்பாடு மெச்சத்தக்கது. வல்ல சிந்தனைகள் செயல்வடிவம் பெறும் போது அவை வாழும் வழிகளும் திறந்து கொள்வதுண்டு.

மா.சின்னத்தம்பி
சிரேஷ்டவிரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்

1987 காலப்பகுதியில் மாவட்ட முகாமையாளராக பணியாற்றிய கணேச மூர்த்தி மற்றும் ஏனைய முன் சிந்தனை கொண்ட பலரும் இந்த செயலாற்றத்தை தொடங்கி வைத்தனர். தற்போதைய நிர்வாகத்தினர் இதனை தொடர்கின்றனர்.

தாய்லாந்துக்கு கடத்த முயன்ற வெளிநாட்டு நாணயங்கள் பறிமுதல்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக தாய்லாந்துக்கு 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களைக் கடத்திச் செல்ல முற்பட்ட இருவர் நேற்றுமுன்தினம் காலை சுங்க அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டனர்.

பிரபலமிக்க வர்த்தகர்களான இவர்கள் இருவரும் விமான நிலையத்தில் சந்தேகத்துக்கிடமாகக் காணப்பட்டதையடுத்தே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களிடமிருந்து சுமார் 30 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டன.

இவர்களிடமிருந்த பணம் பறிமுதல் செய்யப்பட்டன.

ஆனால் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத நிலையில் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு விடுவிக்கப்பட்ட சம்பவம் இடம் பெற்றுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

(பூரீ-2)

பன்றிக் காய்ச்சல் நோயினால் உயிரிழந்தோர் 22ஆக உயர்வு

(கொழும்பு)

இலங்கையில் பன்றிக்காய்ச்சல் நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 22ஆக உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏஎச்1என்1 வைரஸ் தொற்றினால் இந்த மரணங்கள் சம்பவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த வாரத்தில் மட்டும் சுமார் ஒன்பது பேர் இக் காய்ச்சலினால் உயிரிழந்துள்ளதாக தேசிய தொற்றுநோய்ப் பிரிவு அறிவித்துள்ளது.

வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 342 ஆக உயர்வடைந்துள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாவட்டத்தில் 105 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 23பேரும், கண்டி மாவட்டத்தில் 19பேரும், காலி மாவட்டத்தில் 11பேரும்,நுவரெலியா மாவட்டத்தில் 10 பேரும் இந் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(பூரீ-2)

நிபுணர் குழு- நல்லிணக்க ஆணைக்குழு இடையிலான சந்திப்பு சிங்கப்பூரில்

(கொழும்பு)

ஜக்கிய நாடுகளின் நிபுணர் குழுவிற்கும் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவிற்கும் இடையிலான சந்திப்பை சிங்கப்பூரில் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நிபுணர்குழுவின் இலங்கை விஜயத்திற்கு உள்நாட்டில் எழுந்த எதிர்ப்பலையை சமாளிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் சிங்கப்பூரில் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவினரும் ஜக்கிய நாடுகளின் நிபுணர் குழுவினரும் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜாதிக ஹெல உறுமய , ஜே.என்.பி., தேசப்பற்றுடைய தேசிய இயக்கம் உள்ளிட்ட தேசியவாதக் கட்சிகளும் அமைப்புக்களும் நிபுணர் குழு இலங்கைக்கு விஜயம் செய்வதனை கடுமையாக எதிர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சர்வதேச இராஜதந்திர உறவுகளைப் பேணிக் கொள்வதற்கும் தேசியவாத சக்திகளின் எதிர்ப்பை சமாளிப்பதற்காகவும் இவ்வாறு வெளிநாடொன்றில் நிபுணர் குழுவை சந்திப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஜக்கிய நாடுகளின் நிபுணர்குழு பணிகளை முடிவுறுத்தும் வரையில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பணி கள் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நிபுணர் குழு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவினை வெளிநாடொன்றில் சந்திக்கும் என ஜக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் பான் கீ மூனின் பிரதிப்பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவைத் தவிர்ந்த வேறு தரப்பினர்களுடன் சந்திப்புக்களை ஏற்படுத்துவது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவை சந்திப்பதனை விடவும் தமது பணிகள் பரந்தளவிலானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

(பூரீ-2)

மழை வெள்ளத்தால் 33ஆயிரம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

மழைவெள்ளம் காரணமாக சுமார் 33ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

கடுமையான மழையினால் நாட்டின் பல பாகங்களிலும் காணப்படும் குளங்களின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பண்டிகைக் கால விடுமுறையைக் கழிப்பதற்காக வெளியிடங்களுக்கு செல்பவர்கள் நிதானமாக செயற்படவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக நீர் நிலைகளில் நீராடுதல் மற்றும் படகுச் சவாரிகளை மேற்கொள்ளுதல் ஆபத்தாக அமையக் கூடும் என எச்சரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

(பூரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பது வருடங்களின் பின்னர் யாழில் பௌத்த தமிழ்ச் சங்கம்

யாழ்.மாவட்ட பௌத்த தமிழ் சங்கம் 30 வருடங்களின் பின்னர் மீண்டும் இயங்கவுள்ளது. அதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்று சங்கத்தின் இணைப்பாளர் அருள்நேசரத்தினம் ரவிக் குமார் தெரிவித்துள்ளார்.

1952ஆம் ஆண்டு நிஷங்க விஜயரட்ண என்பவர் யாழ். மாவட்ட அரச அதிபராக இருந்த காலத்தில் பௌத்த தமிழ் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் இச் சங்கத்தின் தலைவராக யாழ். புகையிரத நிலைய வீதி யைச் சேர்ந்த எஸ்.வைரமுத்து நியமிக்கப்பட்டிருந்தார்.

இன்று வரை அவர்தான் தலைவராக கடமையாற்றி வருகின்றார். இப் போது அவருக்கு வயது 93 ஆகும். வயோதிபத் தளர்வால் அவர் இப்போது செயற்பட முடியாதவராக உள்ளார்.

யுத்த சூழ்நிலையினால் இந்தச் சங்கத்தின் செயற்பாடுகள் முடங்கிப் போயிருந்தன. தற்போது ஏற்பட்டுள்ள சுமுகமான சூழ்நிலையினைக் கருத் திற்கொண்டு அதனை மீண்டும் யாழ்ப்பாணத்தில் இயக்குவதற்கான நட வடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளோம் என புதிய இணைப்பாளர் தெரிவிக்கின்றார்.

யாழ். நாகவிகாரையைத் தலைமைப் பீடமாக்கிக் கொண்டு இயங்கிய இந்தச் சங்கத்திற்கு அச்சுவேலி, புத்தூர், கரவெட்டி ஆகிய இடங்களில் கிளை அலுவலகங்கள் காணப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.

(ச-5)

விக்கிலீக்ஸின் ஆவண காப்பகம் பூமிக்கு அடியில் அமைந்துள்ளது

பூமிக்கு அடியில் 30 மீற்றர் ஆழத்தில் விக்கிலீக்ஸ் இணையத் தளத்தின் ஆவண காப்பகம் இருப் பதாக தகவல்கள் வெளியாகியுள் ளன. அமெரிக்கா உள்ளிட்ட பல் வேறு சர்வதேச நாடுகளின் இரக சிய ஆவணங்களை வெளியிட்டு உலக அளவில் பெரும் பரபரப்பை கிளப்பிவரும் விக்கிலீக்ஸ் இணை யத்தளம் இரகசிய இடத்தில் செயற் பட்டு வருகிறது.

இந்நிலையில் அந்த இணை யத்தளம் வெளியிடும் தகவல் திரட்டு அடங்கிய ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டுவரும் இரகசிய இடம் குறித்து தற்போது தகவல் கள் வெளியாகியுள்ளன. சுவீடன் நாட்டில் உள்ள ஸ்டாக்ஹோம் நக ரின் மையப்பகுதியில் பயோனின் என்ற இடத்தில் இந்த இரகசிய இடம் அமைந்துள்ளது. பூமிக்கு அடியில் 30 மீற்றர் ஆழத்தில் அமைந் துள்ள இந்த இரகசிய அலுவலகம் கிரானைட் பாறைகளை குடைந்து உருவாக்கப்பட்டுள்ளது. முன்பு வெடிபொருட்கள் உள்ளிட்டவற்றை பாதுகாக்கப்பட பயன்படுத்தப்பட்டு வந்த இந்த குகை கடந்த 2008இல் மீண்டும் திறக்கப்பட்டது.

சுவீடன் நாட்டு கட்டடக்கலை நிபு ணர்கள் ஆல்பர்ட் பிரான்ஸ், லோனார்டு மற்றும் கென்னத் ஆடம்ஸ் உள்ளிட்டோர் இதை புதுப் பித்து நவீனப்படுத்தியுள்ளனர்.

இந்த கதவு கடந்த 1943இல் உருவாக்கப்பட்டுள்ளது. வெடிகுண்டு களால் சேதமடையாதவாறு இந்த இடத்தில் பாதுகாப்பு வசதிகள் செய் யப்பட்டுள்ளன. விக்கிலீக்கிஸின் கைவசம் உள்ள தகவல்கள் அனைத்தும் மிக அதிக கொள்ள ளவு திறன் கொண்ட மெமரி டிஸ்க் கில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதா கவும் தகவல்கள் வெளியாகி உள் ளன. இங்குள்ள சுப்பர் சர்வர்கள் மூலம் பல்வேறு நிறுவனங்களுக்கு விக்கிலீக்ஸ் தகவல்களை வழங்கி வருகிறது. (ச-5)

நத்தார் கொண்டாட்ட விபத்துக்களில் 500இற்கும் மேற்பட்டோர் படுகாயம்

நத்தார் பண்டிகை கொண்டாட் டங்களினால் ஏற்பட்ட தீடீர் விபத்து களில் காயமடைந்த 500க்கும் மேற்பட்டோர் நேற்று முன்தினம் இரவு வரை நாட்டின் பல்வேறு வைத்தியசாலைகளிலும் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு தேசிய வைத்தியசா லையின் தீடீர் விபத்துப் பிரிவில் நண்பகல் வரை 300 க்கும் மேற் பட்டோர் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டதாகவும் இவர்களில் 91 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரு வதாகவும் விபத்துச் சிகிச்சைப் பிரிவுப் பணிப்பாளர் டாக்டர் பிரசாத் ஆரியவன்ச தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கையானது கடந்த வருடம் இதேகாலப் பகுதி யில் காயமடைந்தவர்களின் தொகையை விட அதிகமெனவும் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை இத்தகைய தீடீர் விபத்துக்களால் களுபோவில தேசிய வைத்தியசாலையில் கடந்த 24ஆம் திகதி நண்பகல் வரை 130 பேர் காயம் காரணமாக அனு மதிக்கப்பட்டதாக அதன் பணிப்பா ளர் டாக்டர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

இதேபோன்று மாத்தளை வைத் தியசாலையிலும் தீடீர் விபத்துக்க ளில் காயமடைந்த 31 பேர் அனும தித்கப்பட்டுள்ளதாக அவ் வைத்திய சாலையின் பணிப்பாளர் டாக்டர் என்.ஏ.எஸ்.இ.சமரக்கோன் தெரி வித்தார்.

பண்டிகைக் காலங்களில் பட் டாசு கொளுத்துவதை முடிந்தளவு தவிர்க்குமாறும் கொளுத்தும் போது அவதானமாக இருக்குமாறும் கொழும்பு தேசிய வைத்தியசாலை யின் விபத்துச் சேவைப் பிரிவுப் பணிப்பாளர் டாக்டர் பிரசாத் ஆரிய வன்ச அறிவுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

நாடும் நடப்பும்

துறந்ததை மறந்தவர்

இனியது, உயர்வது உண்மை
பெரும் இரட்சகர் என்பது முண்மை
கோடி யசுத்தம் சூழ்ந்திடினும்
போகாதது கங்கையின் புனிதம்
கங்கைக் கொப்பானவர் குருவானவர்
இகழ்ச்சிக்கும், புகழ்ச்சிக்கு மப்பால்
அருளாட்சிக் குரித்தானவர்
துறந்த தைமறந்து அரசோடிணைந்து
தரித்திரம் சூழ புதுச் சரித்திரம் சமைக்கும்
போதி மாதவன் பெயரினைச் சொல்லி
புனிதரானவர்; தரித்திரோமென தரித்திரார் எவரும்
இங்கே புரிந்திடு புனிதா!

-அறியாதவன்

இன்றைய நாளில் முன்னைய பதிவுகள்

★ 537 - ஹேகியா சோபியா கட்டி முடிக் கப்பட்டது.

★ 1703 - இங்கிலாந்துக்கு வைன்களை இறக் குமதி செய்வதற்கு போர்த்துக் கீச ருக்கு தனியுரிமை வழங்கும் ஒப்பந் தம் இங்கிலாந்துக்கும் போர்த்துக் கல்லுக்கும் இடையில் ஏற்பட்டது.

★ 1831 - சார்ள்ஸ் டார்வின் உயிரினங்களின் படிவளர்ச்சிக் கொள்கை பற்றிய ஆய்வுக்காக தென்னமெரிக்கா நோக் கிப் புறப்பட்டார்.

★ 1836 - இங்கிலாந்தின் வரலாற்றில் மிக மோச மான புயல் சசெக்ஸ் நகரில் இடம் பெற்றது. 8 பேர் கொல்லப் பட்டனர்.

★ 1845 - பிள்ளைப் பேறுக்கு ஈதர் மயக்க மருந்தாக முதற் தடவையாக ஐக் கிய அமெரிக்காவில் ஜோர்ஜியா வில் பயன்படுத்தப்பட்டது.

★ 1864 - இலங்கையில் முதலாவது தொட ரூந்து சேவை கொழும்புக்கும், அம் பேபுசைக்கும் இடையில் ஆரம்பிக் கப்பட்டது.

★ 1918 - ஜேர்மனியருக்கெதிரான பெரும் எழுச்சி போலந்தில் ஆரம்பமானது.

★ 1922 - ஜப்பானின் ஹோஷோ உலகின் முத லாவது விமானம் தாங்கிக் கப்பலாக பாவிக்கப்பட்டது.

★ 1923 - ஜப்பானிய மாணவன் ஒருவன் இளவரசர் ஹிரோஹிட்டோவைக் கொல்ல முயற்சித்தான்.

★ 1934 - பேர்சியா ஈரான் என்ற பெயரைப் பெற்றது.

★ 1939 - துருக்கியில் ஏர்சின்கன் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 30ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1945 - 28 நாடுகளின் ஒப்புதலுடன் உலக வங்கி உருவாக்கப்பட்டது.

★ 1949 - இந்தோனேசியா ஒன்றுபட்ட விடு தலை பெற்ற நாடாக நெதர்லாந்து அறிவித்தது.

★ 1956 - தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

★ 1968 - சந்திரனுக்கான முதலாவது மனித விண்வெளிப்பயணக் கப்பலான அப் பல்லோ 8 பாதுகாப்பாக பசிபிக் கட லில் இறங்கியது.

★ 1978 - ஸ்பெயின் 40 வருடகால சர்வாதிகார ஆட்சியின் பின்னர் ஜனநாயக நாடா னது.

★ 1979 - சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ் தானைக் கைப்பற்றியது. ஜனாதிபதி ஹபிசுல்லா அமீன் சுட்டுக்கொல்லப் பட்டு பப்ராக் கர்மால் தலைவரானார்.

★ 1985 - ரோம் மற்றும் வியன்னா விமான நிலையங்களில் பாலஸ்தீன தீவிர வாதிகள் நடத்திய தாக்குதல்களில் 18 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1996 - தலிபான் படைகள் ஆப்கானிஸ் தானில் பக்ராம் வான்படைத் தளத் தைக் மீளக்கைப்பற்றின.

★ 1997 - வடக்கு அயர்லாந்தில் புரட்டஸ் தாந்து துணை இராணுவக்குழுத் தலைவர் பில்லி ரைட் சுட்டுக்கொல் லப்பட்டார்.

★ 2000 - யாழ்ப்பாணம், தென்மராட்சி மிரு சுவிலில் தமது வீடுகளைப் பார்வை யிடச் சென்ற எட்டு பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 2002 - செச்சினியாவில் மொஸ்கோ சார்பு அரச தலைமையகத்தில் இரண்டு குண்டுகள் வெடித்ததில் 72 பேர் கொல் லப்பட்டு 200 பேர் காயமடைந்தனர்.

பிறப்புகள்

★ 1571 - ஜொஹான்னெஸ் கெப்லர், ஜேர்ம னிய அறிவியலாளர் (இ.1630)

★ 1654 - ஜேக்கப் பெர்னோலி, சுவிஸ் கணி தவியலாளர் (இ.1705)

★ 1796 - மிர்சா காலிப், உருதுக் கவிஞர் (இ.1869)

★ 1822 - லூயி பாஸ்டர், பிரெஞ்சு அறிவிய லாளர் (இ.1895)

★ 1901 - மர்லீன் டீட்ரிக், அமெரிக்க நடிகை, பாடகி (இ.1992)

★ 1965 - சல்மான் கான், இந்தி நடிகர்.

இறப்புகள்

★ 1922 - தோமஸ் வில்லியம் ரைஸ் டேவிட்ஸ், பாளி அறிஞர் (பி.1843)

★ 1923 - அலெக்சாந்தர் கஸ்டவ் ஈபல், பிரெஞ் சுப்பொறியியலாளர் (பி.1832)

★ 1979 - ஹஃபிசுல்லா அமீன், ஆப்கானிஸ் தான் முன்னாள் ஜனாதிபதி (பி.1929)

2007-பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ ராவல் பிண்டியில் தற்கொலைக் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 புத்தாண்டு பலன்கள்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் ஆம் பாதம் வரை)

சமயோசித புத்தியால் சாதனை நிகழ்த்தும் மேட இராசி நேயர்களே!

வளமான வாழ்க்கைக்கு வழிகாட்ட வந்து விட்டது புத்தாண்டு. இனி மனக்கவலையும் இல்லாமல், பணக்கவலையும் இல்லாமல் வாழ இந்த புத்தாண்டில் கிரக நிலைகள் சாதகமாக இருக்கிறதா? என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

பொதுவாக, உங்கள் இராசிநாதன் செவ்வாயை 'தைரியகாரகன்' என்றழைப்பது வழக்கம். அந்த தைரியமும், தன்னம்பிக்கையும் உங்களுக்கு கைகொடுத்து உதவுவதால், எதைப் பற்றியும் நீங்கள் கவலைப்பட மாட்டீர்கள். இருந்தாலும், புத்தாண்டு என்று பிறக்கும் பொழுது, எல்லோருக்குமே ஒரு ஆசை இருக்கும்.

வருகிற ஆண்டாவது நமக்கு வளர்ச்சியைத் தருமா? கடந்த ஆண்டில் ஏற்பட்ட சிக்கல்கள் தீருமா? தொழிலில் தொல்லை கொடுத்தவர்கள் விலகுவார்களா? எழிலான வீடுகட்டி குடியேற முடியுமா? இந்தாண்டாவது கல்யாண வாய்ப்பு கைகூடுமா? பிள்ளைச் செல்வம் துள்ளி விளையாட என்ன பரிகாரம் செய்ய வேண்டும்? பிறர் போற்றும் அளவிற்கு நமக்கு வாழ்க்கைத் தரம் உயர 2011 இனிய வழிகாட்டுமா?... என்றெல்லாம் வருடம் பிறக்கும் முன்னதாகவே நமக்கு சிந்தனை வருவது இயற்கைதான்.

மனக்குழப்பத்தை அகற்ற வழிகாட்டுவது நவக்கிரகங்களும், அது நாடிச் செல்லும் கட்டங்களையும், புத்தாண்டில் உள்ள கிரக நிலையின் கட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவை இணைந்து செயல்பட்டால், துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல், பணிந்து வணங்கி பரிகாரங்களை செய்து, யோக பலம் பெற்ற நாளில், தலங்களுக்குச் சென்று வந்தால், தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்களும் தோள் கொடுத்து உதவுவர்.

உங்கள் இராசிநாதன் செவ்வாய் என்பதால், அதற்குரிய எண் ஒன்பதாகும். ஒன்பது எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரை நீங்கள் அமைத்துக் கொள்ளலாமா? என்று யோசிப்பீர்கள். இருப்பினும், சுய ஜாதகத்தில் செவ்வாய் இருக்கும் பாதசார அடிப்படையில் ஆராய்ந்து அதற்குரிய நவாம்சத்தில் இருக்கும் கிரக நிலை அறிந்து, அந்த கிரகத்திற்குரிய எண்ணின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும், உங்கள் தொழில் நிலையத்தின் பெயரையும் அமைத்துக் கொண்டால், எதிர்காலம் இனிமையாக அமையும். எடுத்த காரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.

உங்கள் இராசியின் சின்னம் துள்ளித் திரியும் ஆடு என்பதால், சுறுசுறுப்பு உங்கள் உடலிலேயே ஒட்டிக்கொண்டிருக்கும். உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள், களைப்பை பொருட்படுத்தமாட்டீர்கள். அள்ளிக் கொடுக்கும் சுக்ரன் உங்களுக்கு தனாதிபதியாக விளங்குவதால், வள்ளல்கள் உங்களுக்கு அருகிலேயே இருந்து, ஒத்துழைப்பு தருவர்.

இந்தப் புத்தாண்டில் முதலில் குருப் பெயர்ச்சியும், பின்னர் இராகு-கேது பெயர்ச்சியும், வருடக் கடைசியில் சனிப்பெயர்ச்சியும் நிகழவிருக்கிறது. இதன் விளைவாக, இந்தப் புத்தாண்டு உங்களுக்கு கொடுக்கும் பலன்களைப் பற்றி பார்ப்போம்.

01.01.2011 முதல் 07.05.2011 வரை

இக்காலத்தில் குரு பன்னிரெண்டாமிடத்தில் சஞ்சரிக்கிறார். சனி ஆறாமிடத்தில் சஞ்சரிக்கிறார். பன்னிரெண்டுக்கு அதிபதி பன்னிரெண்டில் சஞ்சரிப்பது விபரீத இராஜயோகம் தான் என்றாலும், எதிர்பாராத விதத்தில் சில விரயங்களையும் ஏற்படுத்தலாம். சுபச் செலவுகளுக்கான பட்டியல் போட்டு வைத்து வருமானம் வரும் பொழுதெல்லாம் அவற்றை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வந்தால், வளர்ச்சியும் கூடும். நிம்மதியும் கிடைக்கும். குறிப்பாக குருவின் பார்வைக்கு பலன் அதிகம்.

எனவே, அதன் பார்வை பதியும் இடங்களாக அமையும் 4, 6, 8 ஆகிய இடங்களால் ஏற்படும் பலன்கள் நல்ல பலன்களாக மாறுகின்றன. வெற்றி வாய்ப்புகளை வீடு தேடி வர வழைப்பது குருவின் பார்வை ஒன்று தான். எனவே, இக்காலத்தில் வீடு, இடம் வாங்குவதற்காக எடுத்த முயற்சி வெற்றி தரும்.

விரும்பியபடியே தாய், தந்தையரின் ஒத்துழைப்பும் கிடைக்கும். அரும்பாடுபட்டு கட்டிய வீட்டில் அக்கறையோடு பழுது பார்க்கும் சூழ்நிலையும் அமையும். எதிரிகள் விலகுவர். இலாகா மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் என்று எதை நினைத்து காத்திருக்கிறீர்களோ, அதுவும் வந்து சேரும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வருமானம் திருப்தி தரும்.

அஷ்டம ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால், அன்றாடப் பணிகளில் இருந்த தொய்வு அகலும். நோய்கள் விலகும். ஓய்வெடுத்துக் கொண்ட நேரம் அதிகமாகவும், உழைக்கும் நேரம் குறைவாகவும் இருந்திருக்கலாம். இனி அந்த நிலை மாறும். நல்ல மாற்றங்கள் இல்லம் தேடிவர குரு வழிபாட்டை மேற்கொள்ளவும். வானவர்க்கு அரசனான வளம் தரும் குருவே என்ற குரு கவசத்தை தட்சிணாமூர்த்தி சந்நிதியில் பாடுங்கள். தித்திக்கும் விதத்தில் வாழ்க்கையில் திசைமாற்றம் உருவாகும்.

08.05.2011 முதல் 31.12.2011 வரை

இக்காலத்தில் ஜென்ம குரு காரணமாக வரவும்-செலவும் சமமாக அமையப் போகிறது. அதன் பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களைப் பார்க்கப்போவதால், வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். ஐந்தாமிடத்தில் குருவின் பார்வை பதிவதால் குழந்தைகள் உங்கள் குண மறிந்து நடந்து கொள்வர். அவர்களின் கல்விக்காகவும், கடல் பயண வாய்ப்பிற்காகவும் எடுத்த முயற்சிகள் கைகூடும்.

உங்களுக்கு எப்படி?

களத்திர ஸ்தானத்தில் பதியும் குருவின் பார்வையால் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த கல்யாணக் கனவுகள் நனவாகலாம். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். இல்லத்திற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

ஒன்பதாமிடததைக் குரு பார்ப்பதால், ஒளிமயமான எதிர்காலத்திற்கு அஸ்திவாரம் அமைத்துக்கொள்ள வழிபிறக்கும். உடன் பிறப்புகள் உங்கள் பாகப் பிரிவினைக்கு ஒத்து வருவர். பங்காளிகளின் பகை மாறி பாசம் கூடும். நீண்ட நாட்களாக வாங்கி வைத்திருந்த இடத்தில் இருந்த பிரச்சினை அகலும். தந்தை வழியில் தக்க ஆதரவு கிடைக்கும். தைரியத்தோடும், தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர்கள்.

இராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

மே 16ஆந் திகதி விருச்சிக இராசியில் இராகுவும், இட இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இது உங்கள் இராசிக்கு இரண்டாமிடத்தில் கேதுவாகவும், எட்டாமிடத்தில் இராகுவாகவும் அமைகிறது. எனவே, இந்த இரண்டாமிடத்து கேதுவின் விளைவாக, எதிர்பாராத மாற்றங்கள் உங்களுக்கு வந்து சேரும். குடும்பஸ்தான கேதுவாக அமைவதால் இல்லத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. வரவைக் காட்டிலும் செலவு கூடும். வாக்குக் கொடுத்தால் அதை நிறைவேற்ற முடியுமா? என்பது சந்தேகம் தான். யோசித்து செயற்பட்டால் யோகம் வந்துசேரும். பாம்புக் கிரகங்கள் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பலன்கள் அதிகமாகக் கிடைக்கும். கூட்டாளிகள் விலகினாலும், புதியவர்கள் வந்திணைவர். மக்கட்செல்வங்களின் கல்யாணக் கனவுகளை நிறைவேற்றி வைப்பீர்கள். தொழில் முயற்சியில் ஏராளமான வாய்ப்புகள் வந்து அலை மோதும். வங்கி சேமிப்பு உயரும். ஆனால், ஆரோக்கியத்தில் மட்டும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டால், உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. சர்ப்பசாந்தி செய்தால் சஞ்சலம் அகலும்.

புத்தாண்டில் பொருள் வளம் பெருக வழிபாடு

கேட்ட வரங்களை அள்ளிக் கொடுக்க, வீட்டில் விநாயகரை வழிபட்டு வாருங்கள். விருப்பங்கள் நிறைவேறவும், நல்ல திருப்பங்கள் உருவாகவும், கற்பக விநாயகரை வழிபட்டு காரியங்களில் வெற்றி காணுங்கள். கணபதி கவசம் பாடினால், கவலைகள் அகலும்.

சனிப்பெயர்ச்சியால் சந்தோஷம் ஏற்படுமா?

இந்த ஆண்டு முப்பெரும் கிரகங்களில் ஒன்றான சனி வருடக்கடைசியில் அதாவது, டிசம்பர் 21ஆம் திகதி துலாம் இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இது உங்களுக்கு கண்டகச்சனி என்ற அமைப்பில் ஏழாமிடத்திற்கு வருகிறது. எனவே, வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகலாம். தொழில் தொடங்குவோர் தங்கள் பெயரில் தொடங்கலாம். குடும்ப உறுப்பினர்களின் பெயர்களில் தொடங்குவது நல்லது. அந்நியதேசத்தில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளவதா, வேண்டாமா? என்று யோசிப்பீர்கள். சுயஜாதகம் வலிமையாக இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். வாகனத் திருத்தச் செலவுகள் அதிகரிக்கும்.

எனவே, பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டு புதிய வாகனங்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும். அலைச்சல் கூடினாலும், ஆதாயத்திற்கு குறைவிருக்காது. மாருதி வழிபாடு இக்காலத்தில் உங்களுக்கு மகிழ்ச்சியை வழங்கும்.

(தொடரும்)

சிவல்புரிசிங்காரம்



ஆளுநர் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மாணவி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி மாதம் முதல் வடக்கில் மீண்டும் சுங்க நடவடிக்கைகள்

(கொழும்பு)

வடக்கில் மீண்டும் சுங்க நடவடிக்கைகளை பதினைந்து வருட கால இடைவெளிக்குப் பின்னர் ஆரம்பிக்க சுங்கத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

மூன்று தசாப்தங்கள் இடம்பெற்ற பய்ங் கரவாதம் ஒழிக்கப்பட்ட் பின்னர் வடக்கு மக்க ளின் வாழ்க்கை இப்போது வழமைக்குத் திரும்பியுள்ளது.

அத்துடன் அரச நிர்வாகப் பணிகளும் முழுமையடைந்துள்ளன. எனவே எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் வடக்கில் சுங்க நடவடிக்கைகளை ஆரம்பிக்க திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக உயர் அதிகாரி ஒருவர் தலை மையில் யாழ்ப்பாணத்தில் காரியாலயம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (ரூ-2)

மகரகம நகைக்கடையில் கொள்ளைச் சம்பவம்

பொலிஸார் சுட்டதில் ஒருவர் பலி

(கொழும்பு)

மகரகமப்பகுதியில் வைத்து நகைக்கடை ஒன்றில் கொள்ளையிட முயற்சித்த சந்தேக நபர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

நேற்றுக்காலை குறித்த ஆபரண விற்ப னை நிலையத்தை கொள்ளையிட வந்த இனம் தெரியாத மூவர் தொடர்பில் பொலி ஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து இந்த சுற்றி வளைப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரை நோக்கி குறித்த நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் பதி லுக்கு பொலிஸார் சுட்டதில் ஒருவர் உயி ரிழந் துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரூ-2)

ஆணைக்குழுவில் சாட்சியமளிக்குமாறு ரணிலுக்கு எழுத்து மூல அழைப்பு

(கொழும்பு)

இலங்கையில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் னால் சாட்சியமளிக்க வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுத்து மூல அழைப்பு விடுக்கப்படவுள்ளது.

இதற்கான திகதியை உறுதிப்படுத்திக் கொள்ளும் முகமாக ஆணைக்குழுவின் செய லாளர் எஸ்.பி. அத்துகோட ரணில் விக்கிரம சிங்கவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வினவியுள்ளார்.

இது தொடர்பில் ரணில் விகிகரமசிங்க கருத் துரைக்கையில், தாம் நாடாளுமன்றத்திற்கு பதிலளிக்கும் பொறுப்பை கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் குழு தமது கருத் துக்களை பெறவிரும்பினால் அதன் தலை வரும் உறுப்பினர்களும் தம்மிடம் கோரிக்கை விடுக்க வேண்டும் என தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே ஆணைக்குழு ரணில் விக்ரமசிங்கவுக்கு கோரிக்கை கடி தத்தை இவ் வாரம் அனுப்பவுள்ளது.

ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவரின் கருத்துப்படி 2002ஆம் ஆண்டு நோர்வே ஏற் பாட்டிலான போர் நிறுத்த உடன்படிக்கை

தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவிடம் கருத் துக்கள் எதிர்பாக்கப்படுகின்றன.

இலங்கையின் போர்க்குற்றம் தொடர் பிலான ஜக்கிய நாடுகளின் நிபுணர் குழு இலங்கைக்கு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்ற நிலையிலேயே ரணில் விக்ரம சிங்கவை கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக் குழு சாட்சியத்துக்காக அழைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரூ-2)

அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய மாதாந்தம் 40 ஆயிரம் ரூபா தேவை

மரக்கறி உள்ளிட்ட பொருட்களுக்கான விலை சடுதியாக உயர்வடைந்துள்ளதால் இலங்கையில் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு குடும்பம் ஒன் றுக்கு மாதாந்தம் 40 ஆயிரம் ரூபா தேவைப் படுவதாக புள்ளி விபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பண்டிகைக் காலத்தில் பொருட்கள் சேவை களுக்கான விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்று தமது அன்றாடத் தேவை யைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக மாதாந்தம் 40 ஆயிரம் ரூபாவினை செல விட நேரிட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த ஒக்டோபர், நவம்பர் மாதங்களுக் கிடையில் வாழ்க்கைச் செலவு புள்ளி 447 ரூபாவினால் உயர்வடைந்துள்ளது.

அத்தியாவசிய தேவைகளுக்காக மாதாந் தம் 40 ஆயிரம் ரூபா தேவைப்படும் நிலை யில் அரசாங்க ஊழியர்களின் குறைந்த பட்ச மாதாந்த சம்பளம் 16 ஆயிரத்து 980 ரூபா எனவும் தனியார் துறையைச் சேர்ந்த ஊழி யர்களின் சம்பளம் 6 ஆயிரத்து 750 ரூபா எனவும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளம் 290 ரூபா எனவும் தெரிவிக் கப்படுகிறது.

கடந்த 5 ஆண்டுகளாக மக்களின் வாழ்க் கைச் செலவு அதிகரித்துச் செல்வதாகத் தெரி விக்கப்படுகிறது.கடந்த 2005 ஆம் ஆண்டு 132 ஆகக் காணப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டி இவ்வாண்டில் 225.8 ஆக உயர் வடைந்துள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் இது வரையில் மக்களின் நுகர்வு இயலுமை 60 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

2009 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மரக் கறி உள்ளிட்ட பொருட்களுக்கான விலை சடு தியாக உயர்வடைந்துள்ளது. (ரூ-2)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர் குறித்து சாட்சியம் திரட்ட தீர்மானம்

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர் சிறு மியர் தொடர்பில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு சாட்சியங்களைத் திரட்ட தீர்மானித்துள்ளது.எதிர்வரும் ஜனவரி மாதம் 11ஆம் திகதி கொழும்பில் சாட்சியங்கள் திரட்டப்படவுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர் முகாம்களில் தங்க வைக் கப் பட்டுள்ள மற்றும் தற்காலிக பராமரிப்பு நிலை யங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சிறுவர் சிறுமியர் தொடர்பான கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

கடந்த காலங்களில் சாட்சியங்கள் திரட்டப்பட்ட போது சிறுவர் சிறுமியர் காணா மல் போனதாக பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதன் போது உயர் பாதுகாப்பு அதிகாரி கள்,சிறுவர் உரிமைகள் தொடர்பான நிபு ணர்கள் உள்ளிட்ட பலர் சாட்சியமளிக்கவுள் ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ரூ-2)

வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்தி விபத்துக்கு வழிவகுக்கும் நபர்கள்

(பருத்தித்துறை)

புத்தூர் மீன் சந்தைப்பகுதியில் அடிக்கடி வீதி விபத்துக்கள் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் மீன்சந்தை, மரக்கறிச் சந்தை ,மதுபான சாலை என்பன இருக்கின் றன.

இவற்றில் தமது தேவைகளை நிறை வேற்ற வருவோர் துவிச்சக்கர வண்டிகளை, மோட்டார் சைக்கிள்களை வீதி ஓரங்களில் நிறுத்துவதனால் வீதியில் விபத்துக்கள் ஏற் படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ரூ-4-10)

இலங்கையில் பேஸ்புக் ஊடாக பண மோசடி

பாவனையாளர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள பேஸ் புக் பாவனை யாளர்கள் இணையத்தள அத்துமீறிய ஊடுரு வலாளர்களின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி யுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இணையத்தள ஊடுருவலாளர் கள் பேஸ் புக்கில் அழகான பெண்களையும் படங்களையும் திடகாத்திரமான ஆண்களின் படங்களையும் பிரசுரித்து அதிக பணத்தை திட்டுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பேஸ்புக் பாவனையாளர்களின் மின்னஞ்சல் கணக்குகளுக்கு சென்று அதில் ஊடுருவுவதன் மூலம் கப்பங்களை கோரி வருவதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பில் இலங்கை கம்பியூட்டர் அவசர சேவைகள் குழு பேஸ்புக் பாவனை யாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தக் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவ தாக தெரிவித்த அக்குழு கடந்த 6 மாதங் களில் மாத்திரம் இவ்வாறான 180 முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இந் நிலையில் இவ்வாறான இணையத்தள ஊடு ருவலாளர்களுக்கு இரண்டு வருட சிறைத் தண்டனை வழங்க சட்டத்தில் இடமுள்ளதாக அவசர சேவைகள் கம்பியூட்டர் குழு குறிப்பிட் டுள்ளது.

எனவே பேஸ்புக் பாவனையாளர்கள் தமக்கு தெரியாதவர்களின் தொடர்புகளை பேஸ் புக்கில் பேணவேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளது. (ரூ-2)

சாமியே சரணம் ஐயப்பா

ஈழத்துச் சபரிமலை யாழ்.கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்-கோண்டாவில்

18ஆம் படி தரிசனமும் ஐயப்ப ஜெயந்தி தின விழாவும்

நிகழும் விகிர்தி வருஷம் மார்கழி மாதம் 12ஆம் நாள் 27.12.2010 இன்று கோண்டாவில் சபரீச ஐயப் பன் தேவஸ்தானத்தில் 18ஆம் படி தரிசனம் இடம் பெறும். மாலை 7 மணிக்கு மார்கழி உத்தர நட்சத் திரத்தில் அவதரித்த இருமூர்த்தி மைந்தன் சபரி மலை தர்ம சாஸ்தா சபரீசனின் ஜெயந்திதின விழா- சிறப்புற நடைபெறும். அபிஷேகம், அலங்கார தீபாராதனை, விசேட பஜனைகள், விசேட 18படிப் பூசை என்பன சிறப்பாக நடைபெற்று நிறைவுற இறையருள் கூடி யுள்ளது.

அனைவரும் வருக அவனருள் பெறுக!

சாமியே சரணம் ஐயப்பா

ஆலயகுருக்கள்

விளம்பர அனுசரணையாளர் :

அனைத்து வகையான காகிதாதிகள், விதம்விதமான எழுதுகருவிகள், அழகு சாதனப் பொருட்கள், கணனி வடிவமைப்புக்கள், தொடர்பாடல் கள் பலதரப்பட்ட சேவையாளர்களின் சேவைகள் இலகுவாகப்பெற

BHARATHY.COM,
PALALY ROAD,
KONDAVIL JUNCTION.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுஸ்திரேலியாவுக்கு அருகிலுள்ள வனாது நாட்டில் பூகம்பம்

பசுபிக் கடலில் சுனாமி எச்சரிக்கை

அவுஸ்திரேலியாவுக்கு அருகில் உள்ள வனர்து நாட்டில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பூகம் பத்தால் பசுபிக் கடல் பகுதியில் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது. பசுபிக் கடல் பிராந்தியத்தில் அவுஸ்திரேலி யாவுக்கு அருகேயுள்ள குட்டி நாடு வனாது. இந்நாடு தீவுகளைக் கொண்டது. கிறிஸ்மஸ் பண்டிகை யான நேற்றுமுன்தினம் அந்த நாடு முழுவதும் விழாக்கோலம் பூண்டி ருந்தது. மக்கள் குதூகலக் கொண்டாட் டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந் நிலையில் நண்பகல் 12 மணியளவில் தலைநகர் போர்ட் விலா உள்ளிட்ட இடங்களில் கடும் பூகம்பம் ஏற்பட்டது. அங்குள்ள வீடுகள் மற்றும் கட்டங்கள் குலுங் கின. இதனால் அதிர்ச்சியடைந்த மக்கள் வீடுகளில் இருந்து வெளி யேறி ஓட்டம் பிடித்தனர்.

கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி விடுதிகளில் நடந்த விசேட விருந்து நிகழ்ச்சிகளில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர். அவர்களும் அதிர்ச்சி அடைந்தனர். உயிர் பிழைத்தால் போதும் எனக் கருதி விடுதிகளை விட்டு வெளியேறினர்.

இதற்கிடையே, கடலில் வழக் கத்துக்கு மாறாக அதிக உயரத் துக்கு அலைகள் எழும்பின. கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் சுனாமிபேரழிவு நிகழ்ந்தது. இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஏற்பட்ட சுனாமி அலைகளுக்கு இலட்சக்கணக்கானவர்கள் பலியா னார்கள்.

அதே நிலைமை தற்போதும் ஏற்பட்டு விடுமோ என அப்பகுதி மக்கள் அஞ்சியபடி பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினர். அதேபோ ன்று பசிபிக் கடல் பகுதியிலும் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது.

பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் சார்பில் அந்தப் பிராந்தி யத்தில் உள்ள பிஜி மற்றும்பிரான்ஸ் ஆட்சி அதிகாரத்துக்குட்பட்ட நியூ கலேடோனியா ஆகிய நாடுகளுக் கும் சுனாமி எச்சரிக்கை விடுக் கப்பட்டது. எனவே, அங்கு உடனடி பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன

வனாது நாட்டில் 7.3 ரிக்டர் அளவில் பூகம்பம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இது கடலுக்குள் ஏற்பட்டதால்தான் சுனாமி ஆபத்து ஏற்பட்டதாகநிபுணர்கள்தெரிவித்துள்ளனர்.

பூகம்பம் காரணமாக உயிர் சேதமோ, பொருட் சேதமோ ஏற்பட வில்லை. அதுபற்றிய விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. இதற்கிடையே, அவைகளின் சீற்றம் குறைந்து சகஜ நிலைக்கு திரும்பி யதை தொடர்ந்து நேற்று அதிகாலை 4 மணியளவில் சுனாமி எச்சரிக்கை வாபஸ்பெறப்பட்டது. பூகம்பம் மற்றும் சுனாமி எச்சரிக்கை காரணமாக நியூ சிலாந்து விமானங்கள் சிறிதுநேரம் தாமதமாகச் சென்றன. (ஸ்ரீ-2)

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு வத்திகானில் போப் பெனடிக்ட் மக்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதை படத்தில் காணலாம்.

அமெரிக்காவின் நெருக்கடி எதிரொலி; பாகிஸ்தானில் தலிபான் தளபதி கைது

பாகிஸ்தானில் வடக்கு வசிரிஸ் தான் மலைப்பகுதி தலிபான்கள் மற்றும் அல்கொய்தா தீவிரவாதிக ளின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு அவர்கள் தனி ஆதிக்கம் நடத்தி வருகின்றனர். அவர்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்க இராணுவம் ஈடுபட்டுள்ளது.

அப்பகுதியில் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகளை ஆளில்லா விமா னங்கள் மூலம் ஏவுகணை வீசி அழித்து வருகிறது. இருந்தும் அவர் களை முற்றிலும் ஒழிக்கமுடிய வில்லை. அவர்களுக்கு பாகிஸ் தான் அரசின் மறைமுக ஆதரவு இருப்பதே காரணம் என அமெரிக் கா கருதுகிறது.

இந்நிலையில், வடக்கு வசிரிஸ் தான் தலிபானின் தளபதி நசிருதீன் ஹக்கானி என்பவரை பாகிஸ்தான் இராணுவம் கைதுசெய்துள்ளது. இவர் தலிபான் கமாண்டர்களின் தலைவர் ஆவார்.

இவர் வெளிநாடுகளில் இருந்து தங்கள் அமைப்புக்கு பணம் வசூலி க்கும் முக்கிய பொறுப்பு வகித்துவந் தார். இவர் பெஷாவரில் இருந்து வடக்கு வசிரிஸ்தானுக்கு 4 தீவிர வாதிகளுடன் காரில் சென்று கொண் டிருந்தார். அப்போது அவரை இராணு வத்தினர்சுற்றிவளைத்துகைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள நசிரு தீன் ஹக்கானி தலிபான்களின் முக்கிய தலைவர் ஜலாலுதீன் ஹக் கானியின் மகன். அமெரிக்காவின் நெருக்கடியால் தான் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்ற கருத்து நிலவுகிறது.

இதற்கிடையே, நசிருதீன் ஹக் கானி கைதுசெய்யப்பட்ட தகவலை பாகிஸ்தான் அரசு இதுவரை வெளி யிடவில்லை இரகசியமாக வைத்துள் ளது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ

மனித உடல் அமைப்பை முப்பரிமாணத்தில் பார்க்கலாம்

கூகுள் வழங்கும் புதிய சேவை

மனித உடலமைப்பை முப்பரிமா ணத்தில் (3டி) வடிவத்தில்பார்க்கும் புதிய வசதியை 'கூகுள் லேப்ஸ்' மூலம்கூகுள்நிறுவனம்வழங்குகிறது.

இணைய முன்னணி தேடுதல் தளமான கூகுள், தங்களது வாடிக் கையாளருக்கு புதிய மற்றும் நவீன வசதிகளை அவ்வப்போது வழங்கி வருகிறது.

கூகுள் எர்த், கூகுள்மேப் உள் ளிட்ட வசதிகள் மூலம் நமது தெருக் கள், நகரங்கள், நாடுகள் உள்ளிட் வற்றைப்பற்றி துல்லியமாக தெரி ந்து கொள்ளமுடியும். இந்த வசதிகள் மூலம் ஏராளமானோர் பயனடைந்து வருகின்றனர். இந்த வகையில் கூகுள் நிறுவனம் தற்போது கூகுள் லேப்ஸ் மூலம் 'பாடி பிரவுசர்' என்ற புதிய வசதியை அறிமுகப் படுத் தியுள்ளது. இதன்மூலம், மனித உடற் கூறுகளை '3டி' வடிவத்தில் பார்க்க முடியும்.

புதிய வசதிமூலம் மனித உடலின் நுண்ணிய பகுதிகளை பெரிது படுத்தியும், சிறிதாக்கியும் பல்வேறு கோணங்களிலும் பார்க்க முடியும். மனிதனின் உள்ளுறுப்புக்கள் எத்த கைய வடிவத்தில் உள்ளன. எலும் புகள், தசைகள், எத்தகைய வடிவத் தில் உள்ளன என்பதை முப்பரிமா ணத்தில் பார்க்க முடியும். கூகுள் லேப் தரும் இந்த வசதியை எல்லாவித மான பிரவுசரிலும் பயன்படுத்த முடியாது.

அதற்கென பிரத்தியேகமாக 'வெப்ஜி.எல். கிராபிக்ஸ்டாண்டர்' என்ற வசதி தேவை. இது கூகுள் குரோம் மற்றும் பர்பாக்ஸ் பீட்டர் ஆகிய பிரவு சர்களில் உள்ளது. இவற்றை http://bodybrowser.googlelabs.comஎன்ற தளத்திலிருந்து டவுண்லோட் செய்து கொள்ளலாம். (ஸ்ரீ-2)

ரஷ்யாவில் கடும்பனி நிலவிவருவதால் அங்குள்ள சிலையின் மீது பனி உறைந்து, சிலையை அலங்கரித்தது போல் காட்சியளிப்பதைப் படத்தில் காணலாம்.

படகில் தீவுப்பகுதிகளை சுற்றிப்பார்க்க சென்ற 40 பேர் நீரில் மூழ்கிப் பலி

இராமநாதபுரம் அருகே கோரச்சம்பவம்

(இராமநாதரபும்)

இராமநாதபுரம் முல்லைத்தீவு அருகே நாட்டுப்படகில் தீவுப் பகுதிகளை சுற்றிப்பார்க்கச் சென்ற குடும்பஉறவினர்கள் 40பேர் நீரில் மூழ்கினர். 13பேர் உடல்கள் தற்போது மீட்கப்பட்டுள்ளன. இறந்தவர்கள் 40பேர் வரை இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இராமநாதபுரம் அருகே உள்ள பெரிய பட்டணத்தை சேர்ந்த குத் தூஸ் ஆலின் குடும்பத்தைச் சேர்ந் தவர்கள் நேற்று அதிகாலையில் 2 நாட்டுப் படகு மூலம் அப்பாத்தீவு மற்றும் மாலைதீவுக்குச் சென்று சுற்றிப்பார்க்கப் புறப்பட்டனர்.

இந்தப் படகில் உயிர் காக்க உத வும் லைப் ஜாக்கெட் எதுவும் இல்லை. முல்லைத்தீவு அருகே சென்ற போது ஒரு படகு மூழ்கும் அபாயம் ஏற் பட்டது. இதனையடுத்து நீரில் குதித் தவர்கள் அருகில் வந்த படகில் தொற்றியுள்ளனர்.

இதனையடுத்து இரண்டு படகு களும் தண்ணீரில் தள்ளாடி மூழ்கத் தொடங்கியது. தகவல் அறிந்த உறவி னர்கள் மற்றொரு படகு மூலம் கடல் நோக்கிப் புறப்பட்டனர்.

கடலோரக் காவல்படையினர் மற்றும் விமானப்படையினர் அங்கு விரைந்தனர். விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்றும் உச்சிப்புளியில் இருந்து சம்பவ இடத் திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. மீட்புப் பணியில் அதிகாரிகள் ஈடுபட் டுள்ளனர்.

படகில் 40 பேர் வரை சென்றி ருக்கலாம் என அதிகாரபூர்வமற்ற தகவல் கள் தெரிவிக்கின் றன. இதுவரை 13 பேர் உடல் கள் மீட்கப்பட்டுள்ளன. இன் னும் பலரது நிலைமை குறித்துமுழுவிபரம்அறியப்ப வில்லை.

இராமநாதபுரம் மாவட் டத்தைப் பொறுத்தவரை யில் வெளிநாடுகளில் இருக் கும் உறவினர்கள் டிசம்பர் மாதம் சொந்த ஊருக்கு வருவது வழக்கம். இவ்வாறு அவுஸ்திரேலியா, டுபாய் உள்ளிட்ட நாடுகளில் இருந்து பெரிய பட்டணத்திற்கு வந்தவர்கள் அப்பாத்தீவுக்கு கிளம்பியுள்ளனர்.



குறிப்பாக இதுபோன்ற தீவுக்குச் செல்ல முறையான அனுமதி வாங்க வேண்டும். ஆனால் நேற்று முன் தினம் படகில் சென்றவர்கள் எவ்வித அனுமதியும் பெறவில்லை என்று தெரியவருகிறது. (ஸ்ரீ-2)

இயேசு பிறந்த இடத்தில் கோலாகல கிறிஸ்மஸ் விழா

(பெத்தலகேம்)

இயேசுநாதர் பிறந்த இடமான பெத்தலகேம் நகரில் கிறிஸ்மஸ் விழா நடந்தது. இதில் ஆயிரக் கணக்கான பக்தர் பல நாடுகளில் இருந்து வந்து கலந்துகொண்டனர். கடந்த ஆண்டு கிறிஸ்மஸ்துக்கு 70 ஆயிரம் பேர் வந்திருந்ததால், இந்த ஆண்டு 90 ஆயிரத்துக்கும் மேற் பட்ட வெளிநாட்டினர் பெத்தலகேம் வருவார் என்று எதிர்பார்ப்பதாக இஸ்ரேல் அதிகாரிகள் எதிர்பார்த்தனர்.

கிறிஸ்தவ பக்தர்கள் உலோகத் தால் ஆன சிலுவையை கைகளில் பிடித்தபடி பெத்தலகேம் நகருக்குள் சாரை சாரையாக நுழைந்தனர். அமெரிக்காவில் டெக்சாஸ் நகரில் இருந்து வந்து இருந்த பாட் ஆல் ம்ஸ்டட் என்ற 64 வயதுப்பெண் கிறிஸ்மஸ் நாளன்று பெத்லகேம் நகரில் இருப்பது இதுதான் முதல் முறை என்றும் பைபிளின் முழு உண்மையும் இந்த நகரம் தருகிறது என்று கண்கலங்கி தெரிவித்தார்.

பபுவா நியுகினியா நாட்டில் இரு ந்து 30 சுற்றுலாப்பயணிகள் கிறிஸ் மஸ் தாத்தாபோல உடை அணிந்து வந்திருந்தனர். அருநாடுகளில் இரு ந்து வந்திருந்த கிறிஸ்தவர்கள் அரேபிய மொழியில் கிறிஸ்மஸ் பாடல்களை பாடியபடி வந்தனர். பாலஸ்தீனிய பொலிஸார் சட்டம் ஒழுங்கை காப்பாற்ற நிறுத்தப்பட்டு இருந்தனர். (ஸ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரிவர்கள்!

– சுபாஷ் சந்திரபோஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

அன்பார்ந்த இளைஞர்களே! உங்கள் சிந்தனை எங்கே?

வீர இளைஞர்களுக்கு! இவ்வாறுதான் சுவாமி விவேகானந்தர் தனது ஆன்மீகப் பிரசாரத்தை தொடங்கினார்.

எழுமின்! விழிமின்! எண்ணிய கருமம் கைகூடும் வரை உழைமின்! என்று அவர் அறிவுரை பகர்ந்தார்.

இந்த உலகை நல்வழிப்படுத்த முற்பட்ட சுவாமி விவேகானந்தர் தனது இலக்கை அடைய இளைஞர்களைத் தெரிவு செய்கின்றார்.

இளைஞர்கள் மெய்யறிவும் ஆன்மீகத் தெளிவும் சமூக சிந்தனையும் கொண்டவர்களாக இருந்தால் அதுவே இந்த நாட்டை – உலகை சொர்க்க லோகமாக மாற்ற முடியும் எனக் கருதினார்.

அவரின் அறிவுரைகள் அத்தனையும் இளைஞர்களை நோக்கிய அறைகூவலாக அமைந்திருந்தன.

அந்த மகான் எங்கள் மண்ணுக்கும் வருகை தந்தார். அவரின் திருவடி பட்ட இந்த மண் புனிதமானது. அந்தப் புனிதத்தைப் பேணுவதும் அதை அறுத்துக் கொட்டுவதும் எங்கள் கைகளில்தான் உண்டு.

சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் எங்கள் இளைஞர்களிடம் பரப்பப்பட வேண்டும்.

எங்கள் இளைஞர்கள் சமூகப் பொறுப்பற்றவர்களாக வாழப் பழகிக் கொள்கின்றனர். அல்லது அவ்வாறு அவர்களுக்கு வழிகாட்டப் படுகின்றது.

இந்நிலைமை மிக மோசமான விளைவைத் தரும்.

அன்பார்ந்த இளைஞர்களே! நீங்கள் உங்களைப் பற்றியும் உங்கள் பெற்றோர்களைப் பற்றியும் சிந்திக்கத் தவறினால் அதனால் ஏற்படும் பாதிப்பை நீங்களே அறுவடை செய்வீர்கள். அது மட்டுமல்ல, நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு கருமங்கள் – நீங்கள் நடந்து கொள்கின்ற வழிமுறைகள் அத்தனையும் இந்த மண்ணில் விதைக்கப்படுகின்றன.

இப்போது உங்களுக்கு நியாயமாக இருக்கக் கூடிய எல்லை மீறல்களை – கலாசாரப் பிறழ்வுகளை உங்கள் பிள்ளைகள் செய்யும் போது அவை ஜீரணிக்க முடியாதவையாக இருக்கும்.

அங்குதான் எங்கள் இனத்தின் பெருமையும், சமூகக் கட்டமைப்பும் உடைந்து சின்னாபின்னமாகிப் போகும்.

இளைஞர்களே! நாங்கள் இழந்தவை ஏராளம். எங்கள் இதயங்களை நெருடிக் கொண்டிருக்கும் துன்பங்கள் பல ஆயிரம். பரவாயில்லை காலத்தின் நகர்வில் அவற்றுக்கு விமோசனம் கிடைக்கும். ஆனால், நீங்கள் பழுதாகிப் போனால், நீங்கள் உங்களைப் பற்றிச் சிந்திக்காமல் போனால் அதனால் ஏற்படும் பாதிப்பை எக்காலத்திலும் நிமிர்த்தவும் நிவாரணம் தேடவும் முடியாது.

ஆகையால் சிந்தியுங்கள். உங்கள் சிந்தனை எங்கள் வீதிகளிலுள்ள குழிகளிலிருந்து தொடரட்டும்.

ஓ! இளைஞர்களே! வீதிகள் மட்டுமா இப்படி? இல்லை... இல்லை... அப்படியானால் எங்கோ ஊழல் நடக்கிறது? தட்டுங்கள் திணைக்களக் கதவுகளை. கேளுங்கள் ஏன்? என்று. விடை கிடைக்காவிட்டால் சட்டரீதியாக நீதிமன்றம் செல்லுங்கள். அதுபோதும் எங்கள் மண்ணில் திருத்தங்கள் மலிவதற்கு. நடக்குமா? நடந்தால் சுவாமி விவேகானந்தர் எதிர்பார்த்த இளைஞர்களல்ல; சுவாமி விவேகானந்தராகப் பல இளைஞர்கள் மண்ணில் உதிப்பர்.

முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர்களின் தற்காலிக இணைப்புகள் யாவும் இரத்து

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மாவட்டப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்பில் கடமை யாற்றி வரும் முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் அனைவரினதும் தற்காலிக இணைப்புக்கள் யாவும் எதிர் வரும் 31 ஆம் திகதியுடன் முடிபுறுத்தப் படுவதாக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித் துள்ளார்.

இவ் ஆசிரியர்கள் அனைவரும் ஜனவரி 3 ஆம் திகதி தொடக்கம் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் இயங் கும் பாடசாலைகளில் கடமையேற்பதன் மூலமே எதிர்வரும் காலங்களில் தமது சம்பளக் கொடுப்பனவுகளை அப்பாடசா லைகளினூடாகப் பெற்றுக் கொள்ள முடியும். இவர்கள் தாம் சேவையாற்ற வேண்டிய பாடசாலைகளை முல்லைத் தீவு வலயக் கல்வி அலுவலகத்திற்கு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் சமுகமளித்து இதற்கான கடிதத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

கல்விச் செயற்றிட்ட அமுலாக்கத்தில் மீள் ஆரம்பிக்கப்படாத பாடசாலை ஆசிரியர்கள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் கற்பிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் கடந்த கால அனர்த்தங்களின் மூலம் தமது கல்வியை இழந்த மாணவர் களுக்கு இச்செயற்றிட்டம் வகுப்பு ரீதியாக அமுல்படுத்தப்படவுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

எனவே ஜனவரி 3 ஆம் திகதிக்கு முன்னர் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமுகமளிக்கும் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் போக்குவரத்து வசதியுடன் கூடிய பாட சாலை வழங்கப்படும் எனவும் தவறும் பட்சத்தில் முல்லைத்தீவு கல்வி வலயத் திலுள்ள மிகக் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளுக்கு வழங்கப்படுவது தவிர்க்க முடியாது எனவும் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ச)

அரசு - புலிகள் பேச்சின் போது 'றோ' முக்கிய பங்காற்றியது!

எழுத்தாளர் நாராயண் சுவாமி தெரிவிப்பு

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே இடம்பெற்ற சமாதானப் பேச்சு வார்த்தைகளில் இந்திய உளவு நிறுவனமான 'றோ' ஆற்றிய இரகசியமான பங்கு தொடர்பாகப் பிரபல இந்திய எழுத்தாளர் நாராயண் சுவாமி எழுதிய நூலொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் இரகசியமானதும் முக்கியத் துவம் மிக்கதுமான ஒரு பாத்திரத்தை இந்திய உளவு நிறுவனம் 'றோ' ஆற்றியதாக (The Tiger Vanquished - LTTE's Story) என்ற இவரது நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்நூலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

1998-99ம் ஆண்டுகளில் ஆட்சியிலிருந்த பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான கூட்டணி அரசாங்கமே, இலங்கை விடயங்களில் மீண்டும் நேரடியாகத் தலையிடும் கொள்கை முடிவை எடுத்திருந்தது. அப்போதைய இந்தியப் பாதுகாப்புச் செயலரும் அனுபவம் மிக்க இராஜதந்திரியுமான ப்ரா ஜேஸ் மிஸ்ராவின் மேற்பார்வையில் நோர்வேயின் சமாதானப் பேச்சுவார்த்தை களில் இந்தியா இரகசியப் பங்காற்ற முனைந்தது.

இலங்கை தொடர்பான இந்திய அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டவுட னேயே இந்தியாவின் வெளியக உளவுப் பணிகளை மேற்கொண்ட றோ அமைப் பின் தலையீட்டை இந்திய அரசு வேண்டி யது.

ஆனாலும் இப்பேச்சுவார்த்தை களில் நோர்வேயின் சார்பில் ஆரம்பம் முதல் முக்கிய பாத்திரத்தை வகித்த எரிக் சொல்ஹெய்ம், இப்பேச்சுவார்த்தை களில் இந்திய உளவு நிறுவனத்தின் மறைமுகப் பங்கு தொடர்பாக எவ்விதக் கருத்தையும் தெரிவிக்க மறுத்துள்ளதாக இந்நூல் தொடர்பான கட்டுரையொன்றை எழுதியுள்ள நோர்வே நாட்டுப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

'நான் இப்பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இந்தியாவுடன் நெருங்கிய தொடர் பைக் கொண்டிருந்தேன்என்பது உண்மை. ஆனால் இது தொடர்பாக இந்திய வெளிநாட்டமைச்சு அதிகாரிகளையும் பாதுகாப்புச் செயலரையும் மட்டுமே சந்தித்தேன்' என எரிக் சொல்ஹெய்ம் குறிப்பிடுகின்றார்.

'இந்தியாவின் தீவிரமான பங்குபற் றலின்றி நாம் இதில் வெற்றி பெற்றி ருக்க முடியாது. போர்நிறுத்தம் முதல் பேச்சுவார்த்தையின் ஒவ்வொரு விட யமுமே இந்தியாவின் பங்கு இன்றி முயற்சிக்கப்படவில்லை' என்கிறார் நோர் வேயின் முன்னாள் பிரதி வெளிநாட் டமைச்சர் விதார் ஹெல்கிசன்.

விடுதலைப் புலிகள் மீது இந்தியா எவ்வித கருணையும் கொண்டிருக்க வில்லை. மாறாகப் புலிகளை அழிப்பதில் முக்கிய பங்கு வகித்த இலங்கையின் சிறப்புப் படைப்பிரிவிற்கு இந்தியா பயிற்சியளித்து உதவியது.

'பேச்சுவார்த்தையின் பல நடை முறை விடயங்கள் குறித்து நோர்வே இராஜதந்திரிகளுடன் இந்திய உளவு நிறுவன அதிகாரிகள் கலந்தாலோசனை செய்திருந்தனர். ஆனாலும் இந்திய உளவு நிறுவனமான 'றோ' ஆற்றிய பங்கின் ஆழம் தொடர்பாக விடுதலைப் புலிகள் சரியாகப் புரிந்து கொண்டிருக்க வில்லை' என நாராயண் சுவாமி மேலும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

நூலாசிரியர் நாராயண் சுவாமி இந்திய உளவு நிறுவனமான றோவின் முகவராகக் கருதப்படுபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

வயல் நிலங்களை சூறையாடும் கட்டாக்காலி மாடுகள்!

அரியாலை கிழக்கு விவசாயிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்குப் பகுதி வயல் நிலங்களை சூறையாடிவரும் கட்டாக்காலி மாடுகளின் சுதந்திரப் போக்குக் குறித்து அப்பகுதி மக்கள் பெரும் கவலையடைந் துள்ளனர்.

அரியாலை கிழக்குப் பகுதி விவசாயி கள் 15 வருடங்களாக துன்பங்களைச் சுமந்து வந்தனர்.

சொந்த நிலங்களிலே உரிமையோடு விவசாயம் செய்வதற்கு அனுமதி மறுக்கப் பட்டு வந்தது. எனினும் இவ்வருடம் அவர்கள் அங்கு சென்று விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டு விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த னர்.

பதினைந்து வருடங்களுக்கு முன் அங்கு வாழ்ந்த மக்கள் இடப்பெயர்வின் போது கைவிடப்பட்ட மாடுகளே தற் போது கட்டாக்காலிகளாக பயிர் நிலங் களைச் சேதப்படுத்தி வருகின்றது.

இக்கட்டாக்காலி மாடுகளை அடக்கு வதில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவ டிக்கை எடுத்து தமது விவசாய நடவடிக் கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு உதவி வழங்குமாறு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-7)

சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

உடலில், உள்ளத்தில், உயரிய ஒழுக்கத்தில், ஆன்மீகத்தில் வலிகுன்றியவர்களாக நாம் இருக்கக் கூடாது.நமது நாட்டின் இலட்சிய மாந்தர்கள் இராம னும் சீதையுமே. சிறுவர்கள் கூட, அதிலும் சிறப்பாகச் சிறுமியர்கள் சீதையை வழிபடுகின்றனர். தூய்மை யின் திருவுருவாக, பதிபக்திக்கு, கற்பினுக்கு ஓர் எடுத்துக்காட்டாக, துன்பங்களைப் பொறுமையுடன் தாங்கியவளாக விளங்கிய சீதையே ஒவ்வொரு இந்தியப்பெண்ணின் மிகச் சிறந்த இலட்சியமாகத் திகழுகிறாள். இத்தகைய காப்பிய நங்கையரை ஊன்றிப்படிக்கும் போது உடனே நமக்குப் புலனாவது கணவனிடம் அவர்கள் கொண்ட பதிபக்தியும் அதற்காக அவர்கள் பட்ட துன்பங் களுமேயாம்.இவர்கள் வாழ்க்கை வராலாற்றைப் படிக்கும்போது நமது நாட்டின் குறிக்கோள் மேலை நாட்டுக் குறிக்கோளுடன் எந்த அளவிற்கு வேறுபட்டு விளங்குகிறது என்பதும் உடனேயே புலனாகி விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில் மகளிர் கல்லூரியின் ஒளிவிழா நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் ஆசிரியர் ஒருவர் மாண விக்கு பதக்கம் வழங்கு வதையும் மாணவர்களின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும்

அரசாங்க மரக்கூட்டுத் தாபனத்தின் பிரதேச முகாமையாளர் காரியாலயம் திறப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகிந்த சிந்தனை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடக்கின் வசந்தம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கும் ஜனாதிபதியின் இரண்டாவது பதவி ஏற்பு வைபவத்திற்கும் அமைவாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் உதவிப் பிரதேச முகா மையாளர் காரியாலயமும் மரச்சாலையும் கிளிநொச்சி,யாழ்ப்பாண மாவட்டங்களில் திறந்துவைக்கப்படவுள்ளன.

இந் நிகழ்வுகள் நாளை செவ்வாய்க் கிழமை அரச மரக்கூட்டுத்தாபன தலைவர் எஸ்.அமரசிங்க தலைமையில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா ,சுற்றாடல் பிரதி அமைச்சர் அப்துல் காதர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் சுற் றாடல் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா வினால் சுபமுகூர்த்த வேளையில் திறந்து வைக்கப்படும்.

கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்ட பிரதேச முகாமையாளர் காரியாலயமும் மரச்சாலையும் காலை 10.54 மணிக்கு திறந்து வைக்கப்படும்.அத்தோடு குருநகரில் புதிதாக அமைக்கப்பட்ட பிரதேச முகாமை யாளர் காரியாலயமும் அலுவலர் சுற்றுலா விடுதியும் தளபாட காட்சி நிலையமும் பிற்பகல் 2.45 மணிக்கு திறந்து வைக்கப் படவுள்ளதாக அரச மரக் கூட்டுத்தாபன தலைவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

விபத்தில் வயோதிபர் படுகாயம்

ஆட்டோ, துவிச்சக்கர வண்டிவிபத்தில் வயோதிபர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் உரும்பிராய் சந்திக்கருகில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் அரியாலையைச் சேர்ந்த கு.நடராசா (வயது 62) என்பவரே படு காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.(ஸ்ரீ-4)

இறக்குமதி செய்யப்பட்ட கோழிகள் இன்று சந்தைகளுக்கு விநியோகம்

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய் யப்பட்ட கோழிகள் மற்றும் முட்டை ஆகியன இன்று திங்கட்கிழமை விற்பனைக்காக சந்தைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

குறித்த கோழிகள் மற்றும் முட்டைகள் தொடர்பான தொற்றுநோய் பரிசோதனைகள் நடத்தப்பட்டதற்கான உறுதிப்படுத்தல் அறிக் கைகள் இன்று திங்கட்கிழமை கிடைக்கப் பெற்றதன் பின்னரே அவை சந்தைகளுக்கு விநியோகப்படவுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்தது.

இறக்குமதி செய்யப்பட்ட கோழிகள்மற்றும் முட்டைகள் அடங்கிய கப்பல் கடந்த 24 ஆம் திகதி நாட்டை வந்தடைந்துள்ள நிலையில் அவை தொற்றுநோய் பரிசோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின் றன.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வெளிநாடுகளிலிருந்து கோழி மற்றும் முட்டைகள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அண்மையில் நாடாளுமன் றத்தில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் 2ஆயிரத்து 500 தொன் கோழி மற்றும் 50 மில்லியன் முட்டைகள் ஆகி யன இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித் திருந்தமை குறிப்பிடப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

காந்திய சிந்தனைக் கல்வி

அகில இலங்கைக் காந்திசேவா சங்கத்தினால் காந்திய சிந்தனையை வளர்க்கும் நோக்கில் சான்றிதழுக்குரிய நான்கு மாத வார இறுதி வகுப்புக்கள் எதிர்வரும் ஜனவரி மாதப்பிற் பகுதியில் ஆரம்பமாகவுள்ளன.

மேற்படி கற்கைநெறியில் 18 வயதிற்கு மேற்பட்ட இருபாலாருக் கும் அனுமதி வழங்கப்பட உள்ளதாகவும் கட்டணம் எதுவும் அற விடப்படமாட்டாது எனவும் தேவை கருதினோர்க்கு போக்குவரத்துக்கட்டணம் வழங்கப்படும் எனவும் மேற்படி சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தில் முழுப்பெயர், வயது,முகவரி, தே.அ.அ.இலக்கம், கடைசியாகக் கற்ற பாடசாலையும் வகுப்பும், வேறு கல்வித்தகமைகள் என்பனவற்றை உள்ளடக்கி எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பாக பொதுச்செயலாளர், அகில இலங்கை காந்தி சேவா சங்கம், 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். மேலதிக தகவல் தேவைப்படின் 0775355437, 0212240129 இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ

வடக்கில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் நிலவுகிறது

பொருளாதார அபிவிருத்தி ஆய்வாளர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் எதிர்கா லத்தில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற் படக்கூடிய அபாயம் காணப்படுவ தாக பொருளாதார அபிவிருத்தி ஆய்வாளர் முத்துகிருஸ்ண சர்வா னந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் 95 வீத மான மக்கள் தற்போது கிணற்று நீரையே பயன்படுத்தி வருவதாக வும் சுற்றாடல் காரணிகளினால் எதிர்வரும் காலங்களில் கிணறுகளி லிருந்து சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல் நிலை மை உருவாகக் கூடுமெனவும் எதிர்வு கூறியுள்ளார்.

குறிப்பாக, யாழ்ப்பாணக் குடா நாட்டுப் பகுதி கிணறுகளின் நீர் மாசடைந்திருப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வடக்கின் பல பகுதிகளில் சுண் ணாம்புக் கல் அகழும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் இதனால் சுற்றாடல் அதிகம் மாசடைவதாக வும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் தற்போதைக்கு குடி நீருக்கு தட்டுப்பாடு ஏற்படாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வடக்கு நீர் விநி யோக நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாது என நீர் வழங்கல் வடிகா லமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

குடாநாட்டின் பல பகுதிகளி லும் குழாய் நீர் விநியோக வசதிகள் ஏற்படுத்தப்படும் எனவும் இதற்காக 21 பில்லியன் ரூபா செலவில் புதிய நீர் விநியோகத் திட்டமொன்று ஆரம் பிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட் டுள்ளார்.

குழாய்நீர் விநியோகத்தை அதிகரிப்பதன் மூலம் நீர்ப்பற்றாக் குறைக்கு தீர்வுகாண முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

தூத்துக்குடி –கொழும்பு இடையேயான கப்பல் போக்குவரத்து குறித்து அதிகாரிகள் ஆய்வு

தூத்துக்குடி- கொழும்பு இடையே பயணிகள் கப்பல் போக்கு வரத்து தொடங்குவதற்கு தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் மத்திய அமைச் சரவையும் இலங்கை அமைச்சர வையும் பயணிகள் கப்பல் போக் குவரத்து தொடங்குவதற்கு அனு மதி அளித்துள்ளன.

இதனால் தூத்துக்குடி துறை முகத்தில் உட் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணி முழு வீச்சில் நடந்து வருகிறது. இது குறித்து தூத் துக்குடி துறைமுக பொறுப்புக் கழக துணைத் தலைவர் சுப்பையா தெரிவிக்கையில், தூத் துக்குடி துறைமுகத்தில் இருந்து கொழும் புக்கு பயணிகள் கப்பல்கள் இயங் குவதற் கான உட்கட்டமைப்பு வசதி கள் மேம்படுத்தப்பட்டு வருகின் றன.

துறைமுகத்தில் உட்கட்டமைப்பு வசதி களை பார்வையிட்டு அதிகாரி களுடன் ஆலோசனை நடத்துவதற் காக மத்திய கப்பல் போக் குவரத்து கழக அதிகாரிகள் மற்றும் கப்பல் போக்குவரத்துக்கு அனுமதி அளிக்க கூடிய அதிகாரிகளும் ஜனவரி முதல் வாரத்தில் தூத்துக்குடி துறை முகத்துக்கு வருகின்றனர். அவர் கள் உட்கட்டமைப்பை ஆய்வு செய்கின்றனர். ஜனவரி மாதம் 2ஆவது வாரத்தில் அனைத்தும் தயார் நிலையில் வைக்கப்படும்.

மேலும் தூத்துக்குடி –கொழும்பு இடையே கப்பல் இயக்குவதற்கு இதுவரை 7 கம்பனி கள் விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்துள்ளன. அவர்களில் தகுதியானவர்களை மத்திய கப்பல் போக்குவரத்து கழகம் தெரிவு செய்து கப்பல் இயக்க அனும தித்கப்படவுள்ளன என்றார். (ஸ்ரீ-4)

தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 158 ஆவது ஜயந்தி

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் 27.12.2010 இன்று திங்கட்கிழமை தூய அன்னை **ஸ்ரீசாரதாதேவியின்** 158ஆவது ஜயந்தி பக்தியுர்வமாக அனுஷ்டிக்கப்படும்.

காலம் : 6மணி ஆரதி பகல் 12 மணிக்கு விசேட பூஜை, பிரசாதம் வழங்கல்.

தவத்தினை எளிதாப் புரிந்தனள்; யோகத்
தனிநிலை ஒளியெனப் புரிந்தாள்;
சிவத்தினை இனிதாப் புரிந்தனள்; மூடச்
சித்தமும் தெளிவுறச் செய்தாள்;
பவத்தினை வெறுப்ப அருளினள்; நானாம்
பான்மை கொன்று அவள் மயம் புரிந்தாள்;
அவத்தினைக் களைந்தாள் அறிவென விளைந்தாள்;
அனந்தமா வாழ்க இங்கவளே!

பாடசாலை மாணவர்கள் **செல்வி ம.நிரோஜினி**, வட்டக்கச்சி, **செல்வன் வி.ஜதீஷ்** (சிவப்பிரகாச மகாவித்தியாலயம்) இருவருக்கும் புதிய துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படும்.

தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை முகாமையாளர், **திரு.ம.பரமானந்தம்**
மக்கள் வங்கி, பருத்தித்துறை முகாமையாளர், **திரு.மு.சிவனேசன்**
ஆகியோர் அன்பளிப்பை வழங்கி வைபவத்தை சிறப்பிப்பார்கள்.

இறைபணியில்
அன்னையின் அடியவன்.

(சி-1974)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேசிய பாதுகாப்பு தின நிகழ்வில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பிரதமர் டி.எம்.ஜெயரட்ண வரவேற்கப்படுவதையும் மாணவர்களின் அணி நடையையும் மேலுள்ள படங்களிலும் மாணவி ஒருவருக்கு பிரதமர் பதக்கம் அணிவிப்பதையும் தேசிய பாதுகாப்பு தின நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் : சுதாகர்,குமார்)

அன்டர்ஷன், தீரிம்லெற் வேகத்தில் ஆஸி.முதல் இன்னிங்ஸில் சுருண்டது

இங்கிலாந்து அணிக்கு பலமான ஆரம்பம்



(மெல்போர்ன்)

அன்டர்ஸன், தீரீம் லெற்றின் துல்லிய மான வேகத்தில் சிக்கி அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 98 ஓட்டங்களை எடுத்து சகல சிக்கெட்டுக்களையும் இழந்தது.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் விக் கெட் இழப்பின்றி 157 ஓட்டங்களை எடுத்தது.

அவுஸ்திரேலிய - இங்கிலாந்து அணி கள் மோதும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடை பெற்று வருகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் முதல் மூன்று போட்டிகளிலும் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றிபெற்ற நிலையில் தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

இந்நிலையில் நான்காவது டெஸ்ட் நேற்று மெல்போர்ன் கிரிக்கெட் அரங்கில் ஆரம்பமானது.

கிறிஸ்மஸ் தினத்திற்கு மறுதினமான நேற்று ஆரம்பமான இப் போட்டி பொக்சிங் டே (Boxing Day) டெஸ்ட் போட்டி என அழைக் கப்படுகின்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ரொரஸ் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய அவுஸ்திரேலிய அணி அன்டர்ஷன் - தீரீம்லெற் ஜோடியின் துல்லியமான வேகத் தில் சிக்கி முதலாவது இன்னிங்ஸில் 98 ஓட் டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் மைக்கல் கிளார்க் 20 ஓட்டங்களை யும் ஹக்ஸ் 16, சிடில் 11 ஓட்டங்களையும் அதிகபட்சமாக எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜேம்ஸ் அன்டர்ஷன் 44 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை யும் தீரீம்லெற் 26 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் பிரேஸ்மன் 2விக் கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கி லாந்து அணி நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங் ஸில் விக்கெட்ட இழப்பின்றி 157 ஓட்டங் களை எடுத்தது.

இதில் குக் 80 ஓட்டங்களையும் அணித் தலைவர் ஸ்ரொறஸ் 64 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ள னர். இப் போட்டியில் இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 10விக்கெட்டுக் கள் கைவசமுள்ள நிலையில் 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளது. இன்னிலையில் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

அனைத்து வீரர்களும் பிடிகொடுத்தனர்.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி வீரர்கள் அனைவரும் பிடி கொடுத்து ஆட்ட மிழந்தனர் என்பது விஷேட அம்சமாகும்.

ஸ்ரையன் மிரட்டல் இந்தியா தினறல்

(டர்பன்)

ஸ்ரையனின் வேகத்தில் பணிந்த இந்திய அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களை எடுத்தது.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட் ஒரே ஒரு இருபது - 20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடு கின்றது.

இதில் முதல் டெஸ்டில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி தொடரில் ஒன்றுக்குப் பூச்சியம் என்ற கணக்கில் முன்னிலையில் உள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் நேற்று டர்பனில் ஆரம்பமானது.

இப்போட்டி மழை காரணமாக ஒரு மணி நேரம் தாமதமாகவே ஆரம்பமானது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் சிமித் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங் ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களை எடுத்த போது போதிய வெளிச் சமின்மை காரணமாக ஆட்டம் இடைநிறுத் தப்பட்டது.

எனினும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்றைய முதல் நாள் ஆட்டம் 56 ஓவர்கள் மாத்திரம் வீசப்பட்ட நிலையில் நிறுத்தப் பட்டது.

இதில் வி.வி.எஸ்.லக்ஷ்மன் 38 ஓட்டங்க ளையும் சேவாக், டிராவிட் தலா 25 ஓட்டங்க ளையும் முரளி விஜய்,புஜார தலா 19 ஓட்டங் களையும் எடுத்து ஆட்டமிழந்ததுடன் அணித் தலைவர் தோனி 20 ஓட்டங்களுடனும் ஹர்பஜன் சிங் 15 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழக்காமல் களத்திலுள்ளனர்.

பந்து வீச்சில் டேல் ஸ்ரெய்ன் 4 விக் கெட் டுக்களையும் ரிசொற் சோபே 2 விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

ஐ.பி.எல்.தொடர் பாக்.விருப்பம்

நான்காவது ஐ.பி.எல். தொடரில் விளை யாட பாகிஸ்தான் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி) விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) சார் பில் ஆண்டுதோறும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) இருபது - 20 தொடர் நடக்கிறது. இதில் கடந்த 2008 இல் நடந்த முதலாவது ஐ.பி.எல் தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் விளையாடினர்.

எனினும் 2008 இல் நடந்த மும்பை பயங் கரவாதத்தாக்குதலுக்குப்பின், இந்தியா - பாகிஸ் தான் நாடுகளுக்கு இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக 2009 இல் நடந்த இரண் டாவது ஐ.பி.எல். தொடருக்குத் தங்கள் வீரர் களை அனுப்ப பி.சி.பி மறுத்தது. இந்த ஆண்டு நடந்த மூன்றாவது ஐ.பி.எல் தொடருக்கு 10 வீரர் களுக்கு மட்டும் பி.சி.பி அனுமதியளித்தது.

ஆனால், எந்த ஐ.பி.எல் அணிகளும் பாகிஸ்தான் வீரர்களை ஏலத்தில் எடுக்கவில் லை. இந்நிலையில் நான்காவது ஐ.பி.எல். தொடர் அடுத்த ஆண்டு ஏப்ரல் 8 முதல் மே 22 வரை நடக்கிறது.

இதற்கான வீரர்கள் ஏலம் அடுத்த மாதம் (8-9ம் திகதி பெங்களூரில் நடக்கவுள்ளது. இதில் பாகிஸ்தான் வீரர்களுக்கு அனுமதி இல் லை என பி.சி.சி.ஐ அறிவித்தது. இந்நிலையில் பி.சி.பி தங்கள் நாட்டு வீரர்களை நாலாவது ஐ.பி.எல் தொடரில் விளையாட அனுமதி அளிக் குமாறு விருப்பம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/மட்டுவில் வடக்கு
சந்திரமௌலீச வித்தியாலயம்
பரிசில் நாளும் நிறுவுனர் தினமும்-2010
காலம்: இன்று (27.12.2010 திங்கட்கிழமை) பி.ப.1.00 மணி
இடம்: வித்தியாலயம் காசிநாதர் மண்டபம்
தலைவர்: திரு.ந.ஜெயகுமாரன் (வித்தியாலய முதல்வர்)
பிரதம விருந்தினர்
உயர்திரு.இ.இளங்கோவன் அவர்கள் (செயலாளர்-கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்)
சிறப்பு விருந்தினர்
உயர்திரு. கு.பிரேமகாந்தன் அவர்கள்
(வலயக் கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி)
கௌரவ விருந்தினர்கள்
திரு.திருமதி சிவஞானசுந்தரம் அவர்கள்
(ஸ்தாபகர் பரம்பரை, திருக்கணித பதிப்பக முகாமையாளர்)
திருமதி உமாசந்திரா பிரகாஸ் அவர்கள்
(ஸ்தாபகர் பரம்பரை, உதவி ஊக முகாமையாளர்-வீரகேசரி)
'மௌலீசன்'
(பாடசாலையின் 135 வருட பெருமைதாங்கிய சிறப்பு மலர்)
மதிப்பீட்டுரை
கலாநிதி கலாமணி அவர்கள்
(முதுநிலை விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
(சி-1980)
பாடசாலைச் சமூகம்

M.C. COLLEGE
கிளிநொச்சி, முல்லைத்தீவில் முதன்முதலாக
ADOP Multimedia Diploma
அனுபவம் பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படவுள்ளது

❁பாடசாலை மாணவர்களுக்கான கணனிக் கற்கைநெறி(ICT,GIT)
❁பணிபுரிவோர்க்கான விசேட நேரசூசியுடன் வேலைத்திட்டங்களுக்கமைவான கணனிக்கற்கை.
❁சிறுவர்களுக்கான அடிப்படைக் கணனி அறிவூட்டல்.
❁ஒவ்வொரு மாணவர்களிலும் ஆசிரியர்களின் விசேட கவனமும் அதிக நேர பயிற்சி வகுப்புக்களும்.
போரினால் பாதிக்கப்பட்ட தாய் /தந்தையை இழந்த மாணவர்களுக்கான விசேட கட்டணச் சலுகையுடன் கற்கைநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழும் வழங்கப்படும்.
(சி-972)
ஆரம்பம்:28.12.2010 நேரம் :3.00 PM
நெத்தலி ஆறு தொடர்புகளுக்கு
தர்மபுரம் ,கிளிநொச்சி. 0777389970

மரண அறிவித்தல்
முத்து வைரமுத்து

கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசாவிளானை வாழ்விடமாகவும் கொண்டு தற்போது நெல்லியடியில் வசித்தவருமாகிய முத்து வைரமுத்து அவர்கள் 26.12.2010 நேற்று காலமானார்.அன்னார் ஆனந்தன் மணப்பந்தல் சேவையின் உரிமையாளர் ஆனந்தனின் தந்தையாராவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் 27.12.2010 இன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்
இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்
(சி-1978)
ஆனந்தன் மணப்பந்தல் சேவை
முருகையன் கோவில் வீதி,
நெல்லியடி.
தொ.பே.-0777290536, 0212264871
தகவல்:
வை.ஆனந்தன்

யுத்த நிறுத்தத்துக்கான...

தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியதாகவும் அப்போது ஆணைக்குழுமுன்பாகசாட்சியமளிப் பதற்கு வசதியான நேர ஒதுக் கீட்டை செய்து தருமாறு ரணில் விக்கிரம சிங்கவை கேட்டுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கொழும்பு ஆங் கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளி யிட்ட ரணில் விக்கிரமசிங்க நாடாளு மன்றத்துக்குமட்டுமேபதிலளிக்கவேண் டிய கடமைப்பாட்டை தான் கொண்டி ருப்பதாகவும் ஆனால் ஆணைக்குழு முன்பாக தான் ஆஜராகி சாட்சியமளிக்க வேண்டுமாயின் அது தொடர்பாக ஆணைக்குழுவின் தலைவர் அல்லது உறுப்பினர்களே தனக்கு அழைப்பு விடுக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து ரணில் விக்கிரம சிங்கவுக்கு இது தொடர்பாக ஆணைக் குழு அதிகார பூர்வமான முறையில் எழுத்து மூலமாக அடுத்த வாரத்தில் அழைப்பு விடுக்கும் என எதிர்பார்க்கப்ப டுகின்றது.

2002ஆம் ஆண்டில் நோர்வே யின் மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவருடன் போர் நிறுத்த உடன்படிக்கையில்கை யொப்பம் இடுவதற்கு பின்னணி களிலிருந்த காரணங்களை விளக்கு மாறு ஆணைக்குழு ரணில் விக்கிரம சிங்கவை கேட்டுக் கொள்ளவிருப்ப தாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

2002பெப்ரவரி 21ஆம்திகதி முதல் நடைமுறையில் உள்ள போர் நிறுத்த உடன்படிக்கை முறிவடை வதற்கு காரணமாக இருந்தசூழ்நிலைகளையும்அதனைத்தொடர்ந்து2009 மே19 ஆம் திகதி வரையில் இடம்பெற்றசம்பவங்களையும் ஆராய்வதற்காகவேஇந்த ஆணைக்குழு ஜனாதிபதியால்நியமிக்கப்பட்டது. (ச-5)

கடந்தகால நிகழ்வுகளை மற...

வேண்டும்என்பதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விருப்பமாகும்.

இதேவீரசிங்கம்மண்டபத்தில்1958 ஆம் ஆண்டு அதாவது 52 வருடங் களுக்கு முன்னர் தமிழ் மக்கள் மத் தியில் உரையாற்றியிருக்கிறேன். அன்று குரோத மனப்பாங்கு யாருக் கும் இருக்கவில்லை. அதேபோல் கடந்த கால நிகழ்வுகளை மறந்து, குரோத உணர்வுகளை விட்டொழித் துப் புத்திசாதுர்யமான புதிய சமுதா யத்தைக்கட்டியெழுப்புவதற்கு அனை வரும் ஒத்துழைக்க வேண்டும்.

இலங்கையின் கல்வியறிவு வீதம் 92 சதவீதத்திலும் அதிகமாகும். யாழ்ப் பாணத்தைப் பொறுத்தவரையில் இது மேலும் அதிகரிக்கலாம். ஆகையி னால் புத்தியைப் பயன்படுத்தி நாட் டின் வளர்ச்சியிலும் பாதுகாப்பிலும் பங்களிப்புச் செய்கின்ற புதிய சமுதா யத்தை உருவாக்குவதே எமது நோக் காகக் கொண்டு அனைவரும் செயற் பட வேண்டும்.

வடக்கில் ஒரு இலட்சம் வீடுகள் அமைக்கும் திட்டம் ஒன்று ஏற்படுத் தப்படும். முகாம்களுக்குள் உள்ள மக்கள் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர விருப்பம் கொண்டுள்ளனர். கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதும் மீளக்குடியமர்த்தப்படுவார்கள் தேசிய நிதியில் அதிகமான தொகை வடக் குக்கிழக்குக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றார். (ச-5)

பலத்த பாதுகாப்புகளுக்...

அமைச்சர்கள் அங்கு பிரசன்னமா கியிருந்தனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடா ளுமன்ற உறுப்பினர்கள் எவரும் சமுகமளிக்கவில்லை. ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொண்டார். உச்சப் பாதுகாப்பின் மத்தியிலேயே இந்த நிகழ்வுகள் இடம்பெற்றிருந் தன.

தேசியக் கொடியேற்றும்போது சிங்களத்திலேயே தேசியக் கீதம் இசைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் முன்னணி பாடசாலைகளான யாழ். இந்துக்கல்லூரி, யாழ். வேம்படிமகளிர் கல்லூரி மாணவமாணவிகள் தமிழ்ப் பாரம்பரிய உடைகள் அணிந்தவாறு சிங்களத்தில் தேசிய கீதத்தை இசைத் தனர்.

தேசியக் கொடியினை பிரதமர் டி.எம்.ஜெயரட்ண ஏற்றிவைத்தார். வடக்கு மாகாண கொடியை ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியும் யாழ். மாவட்ட கொடியினை அரச அதிபர் இமெல்டாசுகுமாரும்ஏற்றி வைத்தனர்.

அடுத்த ஆண்டில் மட்டக்களப்பில் முஸ்லிம் மக்களுடன் இந்த நிகழ்வை கொண்டாடப் போவதாக அனர்த்த முகாமைத்துவஅமைச்சர்மகிந்தவிஜய சேகர தெரிவித்தார்.

இதேவேளைவிளக்கேற்றும் நிகழ் வின்போது தமிழ்த் தேசியக்கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் பெயர்அறி விக்கப்பட்ட போதிலும் அவர் அங்குபிர சன்னமாகியிருக்கவில்லை. இந்நிகழ் வில் யாழ்.மாவட்டத்திலுள்ள அரச உத்தியோகத்தர்கள் பெருமளவில் கலந்து கொண்டிருந்தனர். (ச-5)

ஐ.நா. நிபுணர் குழு...

ஐ.நா. நிபுணர் குழுவின் மற்றொரு உறுப்பினரும் கொழும்பு வருவார் என எதிர்பார்க்கப்படுவதாக கொழும் பிலிருந்துவெளிவரும்சண்டேலீடர்ஸ் நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளபோதிலும் அவருடன் வரக்கூடிய மற்றையவர் யார் என் பது பற்றிய தகவல்களை தெரிவிக்க வில்லை.

அதேவேளையில் இவர்கள் இரு வரும் கொழும்பு வரும் நோக்கம் தொடர்பாகவோ யாருடன் இவர்கள் பேச்சுக்களை நடத்துவார்கள் என் பதுதொடர்பாகவோதகவல்வெளியிப் படவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டநல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவுடன் பேச்சுக்களை நடத்துவதற்காகவே ஐ.நா. நிபுணர் களின் குழு கொழும்பு வரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் நல் லிணக்க ஆணைக்குழுவுடனான சந்திப்புக்கு புறம்பாக ஏனையவர்களு டனும்நிபுணர்குழுசந்திப்புக்களைமேற் கொள்ளும் என பான் கீ மூனின் பேச்சாளரான பர் ஹான் ஹக் நியூயோர்க்கில் தெரிவித்திருக்கின்றார்.

பர்கான் கக்கின் இந்த கருத்து கொழும்பு அரசி யல் வட்டாரங்களில் பெரும் சர்ச்சைகளை கிளப்பி யிருக் கும் நிலையிலேயே ஐ.நா. நிபுணர் குழுவின் தலைவரும் மற்றொருவரும் அடுத்த வாரம் கொழும்பு வருகின்றார்கள் என்ற செய்தி நேற்று வெளியாகி யுள்ளது.

இச் செய்தியை உத்தியோகபூர்வ வட்டாரங்கள் மறுக்கவில்லை. இதே வேளையில் வெளிநாடொன் றில் ஐ.நா. நிபுணர்குழுவை நல்லிணக்க ஆணைக் குழு சந்திக்கலாம் என வெளியாகியிருந்த செய்தி களையும்நல்லிணக்க ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் மறுத்திருக்கின்றார். (ச-5)

அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்களும்
பமிலி சூப்பர்
கேக் தயாரிப்பதற்கான பொருட்கள் மற்றும் பிஸ்கட், பால்மா, சொக்லேட், சிற்றுண்டி வகைகள், ஐஸ்கிறீம் வகைகள், பழவகை என்பவற்றைப் பெற்றுக்
சந்தைக்கு அருகாமை, மானிப்பாய்.
(சி-1956)
புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக் கழிவு விற்பனை

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்

2013 A/L
கணித உயிரியல் பிரிவுகள்

தமிழ் மொழி மூலம் English Medium
❁ எமது வழமையான ஆசிரியர் குழு ❁
ஆரம்பம் :05.01.2011 WED 8.30 AM
(C-1976)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் ரோட், மாதகல் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org